பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 தை 19 திங்கட்கிழமை 01.02.2021 கதிர் 88

**இனிது ரகசியம் அல்ல!**

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்கும் விடயத்தில் கொழும்பு பேரதிர்வைச் சந்திக்கப் போகின்றது என்பது திண்ணம்.

கோட்டாபய ராஜபக்ஷ அதிகார பீடத்துக்கு வருவதற்கும் அவரது அரசு மூன்றில் பக்கம்02

# கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை வெளிநாட்டவர்களுக்கு தாரைவார்க்கவேமாட்டோம்

## பிரதமர் மஹிந்த திட்டவட்ட அறிவிப்பு



கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை எவ்விதத்திலும் வெளி நாட்டவர்களுக்கு வழங்கப் போவதில்லை என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

தங்காலையின் நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 2

## துறைமுகத் தொழிற்சங்கங்கள் மஹிந்தவுடன் இன்று சந்திப்பு!

துறைமுக தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து இன்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து முக்கிய பேச்சு நடத்தவுள்ளன.

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை முழுமையாக துறைமுக அதிகார சபையின் கீழ் கொண்டுவரும் வரை போராட்டத்தை முன்னெடுப்பதாகத் தொழிற்சங்கங்கள் இறுக்கமான தீர்மானத்தில் உள்ளனர்.

கொழும்புத் துறை 2

## கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்குவது மிகவும் நல்ல விடயமே!



### அமைச்சர் டக்ளஸ் அதிரடி

இந்தியாவுடனும் நாங்கள் நட்புறவைப் பேணவேண்டும். அந்தவகையில் கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்குவதற்கு அரசு உத்தேசித்துள்ளமை நல்ல விடயமே.

– இவ்வாறு கடற்தொழில் நீரியல் வழங்கல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

சமுதாய வேலைத்திட்டத்தின் கீழ் வீடு ஒன்றைக் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

சட்ட ரீதியான 11

## வடக்கில் இன்று பஸ் சேவை முடங்கும்? அரசியல்வாதியின் தலையீட்டால் சிக்கல்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,பெப்.01

அரசியல்வாதியின் அதிகார போட்டியினால் இ.போ.சபை நிர்வாகம் பாதிப்பெனச் சுட்டிக்காட்டி வடக்கில் இ.போ.சபை பஸ்கள் இன்று பணிப் புறக்கணிப்பில் ஈடுபடலாம் எனத் தெரியவருகின்றது.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய பிரதான முகாமையாளராக நியமிக்கப்பட்ட செல்லத்துரை குணபாலச் செல்வனின் நியமனத்தை இடைநிறுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நேற்றிரவு அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் வடக்கு மாகாணத்தில் இ.போ.ச. தொழிற்சங்கள் இன்று எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடும் என அறிய முடிகிறது.

வடபிராந்தியத்தில் குறைந்தளவானோரைக் கொண்ட கட்சி ஒன்றின் 2

## 1000 ரூபா நாளாந்த சம்பளம் கோரி பணிப் புறக்கணிப்புப் போராட்டம்!

### பெப்ரவரி 5இல் பலத்தைக் காட்டுவோம் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அழைப்பு



மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக ஆயிரம் ரூபாவைப் பெற்றுக்கொள்வதற்கான தொழிற்சங்க நடவடிக்கைக்கு மேலும் வலுச் சேர்க்கும் வகையில் மலையகம் உட்பட நாடு தழுவிய ரீதியில் 2

## யாழ்.ஆய்வுகூடத்தில் நேற்று 15 பேருக்குத் தொற்று உறுதி!

யாழ்ப்பாணம்போதனாவைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 15 பேருக்குக்கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இதன்படி யாழ்ப்பாணத்தில் ஒருவர், மன்னாரில் இருவர், வெள்ளாங்குளம் தனிமைப் படுத்தல் மையத்தில் 10 பேர், ஜம்பகோளப்பட்டினம் 2

## மூவர் பலியெடுப்பு உயிரிழப்பு 316

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் உயிரிழந்துள்ளனர்.

கொழும்பு, கடுவலை மற்றும் அங்குறுவாதோட்டைப் பகுதிகளைச் சேர்ந்த மூவரே கொரோனாத் தொற்றால் சாவடைந்துள்ளனர். 2

## கொழும்பில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள சில பிரதேசங்களை விடுவிக்க தீர்மானம்

கொழும்பு மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள சில பிரதேசங்கள் இன்று அதிகாலை 5 முதல் அதிலிருந்து விடுவிக்கப் படவுள்ளன என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயலணி தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாரஹேன்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 100ஆம் இலக்க தோட்டம், துறைமுக பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சென். அன்ரூஸ் பிளேஸ், சென். அன்ரூஸ் வீதி மற்றும் பேலியகொட பொலிஸ் பிரிவில் கஹபட கிராம சேவகர் பிரிவில் 90 ஆம் இலக்க தோட்டம் ஆகிய பகுதிகள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 2

## 64 ஆயிரத்தைத் தாண்டியது கொரோனா

### நேற்றும் 864 பேர்

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 64 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

நேற்றும் 864 2

## தமிழர்களின் போராட்டத்துக்கு சு.கவிலிருந்தும் ஆதரவுக் கரம்!



அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் வட கிழக்கு பிரச்சினை தொடர்பான ஆர்ப்பாட்டத்திற்கு பூரண ஆதரவு வழங்குவதாக தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 3ஆம் திகதி தொடக்கம் 6ஆம் திகதி வரை வடகிழக்கு சிவில் சமூக அமைப்புகளால் 11

## பூண்டுலோயா விபத்தில் இரு இளைஞர்கள் சாவு



பூண்டுலோயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பூண்டுலோயா – கம்பளை பிரதான வீதியில் நியங்கந்தர 11

**Techno World**
தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.
பொறியியல் தொழில்நுட்பம்
தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
உயிர்முறைமைகள் தொழில்நுட்பம்
A/L 2022, 2021
2021 Day Class
வகுப்புகள் ஆரம்பம்
01.02.2021
திங்கட்கிழமை
மாலை 3.30 மணிக்கு
தொ.பே. 0770175346

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நாடாளுமன்றத்தைக் கைப்பற்றுவதற்கும் காரணமாக அமைந்த பேரினவாத சக்திகளில் கணிசமான தரப்பே இப்போது இந்தியாவுக்குக் கிழக்குத் துறைமுகத்தை வழங்கும் திட்டத்துக்கு எதிராகக் கெம்பிக் கொண்டு நிற்கின்றது என்பது அவதானிக்கப்பட வேண்டிய விடயம்.

கொழும்புத்துறைமுக கிழக்கு முனைய விவகாரத்தில் இன்றைய தினம் மிக முக்கியமான நாளாகும். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நாளாகவும் கூட இது அமையலாம்.

கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்குவதற்கு எதிராக துறைமுகத் தொழிற்சங்கங்கள் உட்பட இடதுசாரி அமைப்புகள் கொடுத்த காலக்கெடு இன்று முடிவடைகின்றது.

அதற்கிடையில், கெம்பிக் கொண்டு நிற்கும் தொழிற்சங்கங்களை தனது வழமையான பாணியான இரும்புக் கரம் கொண்டு அடக்கும் திட்டத்தில் கையாள்வதற்குத் தயாராகியுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அதற்குத் துறைமுகப் பணிகளை அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தியுள்ளார். தொழிற்சங்கங்கள் அதிகம் குதித்தால் அவற்றின் உறுப்பினர்களை பணியிலிருந்து வீட்டுக்கு அனுப்பி விட்டு, தனது இராணுவம் மற்றும் கடற்படையைக் கொண்டு துறைமுகப் பணிகளை முன்னெடுக்கும் திட்டத்தில் ஜனாதிபதி உஷாராக இருக்கின்றார் என்று தெரிகின்றது.

புலிகளை அழிக்கின்றேன் என்ற பெயரில் மனிதாபிமானமேயின்றி தமிழ்ப் பொதுமக்களையும் சேர்த்துக் கையாண்ட அதேபாணியில்தான் தொழிற்சங்கங்கள் கையாளப்படப் போகின்றன என்பது வெளிப்படையாகத் தெளிவானது.

கோட்டாவின் பேரினவாத வெறித் தூண்டலுக்கு எடுபட்டு வாக்குகளை அள்ளிக் குவித்த தரப்புகளுக்கு இது தேவைதான். அவர் தீட்டிய மரத்தில் பதம் பார்க்கப் போகின்றார். அவ்வளவுதான்.

துறைமுக விவகாரத்தில் இன்றைய அமைச்சரவைக் கூட்டமும் முக்கியமானது. இன்றுதான் இந்தியா – ஜப்பான் கூட்டுடன் கிழக்கு முனையத்தைக் கையாள்வதற்கான அரசின் உத்தேச திட்ட வரைவு அமைச்சரவைக்கு வருகின்றது.

இந்தத் திட்டத்தை எதிர்க்கும் – கிழக்கு முனையத்தை இந்தியாவிடம் கையளிப்பதை ஆட்சேபிக்கும் – விமல் வீரவன்ஸ, உதயகம்மன்பில்ல போன்ற அமைச்சர்கள் நேற்று முன்தினம் இரவு கூடித் தமக்குள் மந்திராலோசனை நடத்திய பின்னர் இன்று அமைச்சரவைக்கு வருகின்றார்கள். அங்கு அவர்கள் போடப் போகும் வெடிகுண்டு என்ன என்பது தெரியவில்லை.

இந்த அரசின் பிதாமகர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷதான் என்பது நம் அனைவருக்கும் தெரிந்த விவகாரம்தான். அரசின் பிரதான தீர்மானங்களில் நேரடியாகச் சம்பந்தப்பட்டுத் தனது கருத்தைத் திணிக்காமல் அவர் பார்த்துக் கொண்டு இருக்கின்றார் எனினும், இந்த விவகாரம் தங்கள் தரப்புக்கு பெரும் நெருக்கடியையும் பின்னடைவையும் தரும் என்பதைப் புரிந்து கொண்டு தனது அரசியல் அனுபவம் மூலம் இணக்கமாக – பிணக்கின்றி – தீர்ப்பதற்கான ஒரு நகர்வை அவர் ஆரம்பித்திருக்கின்றார் என்று தெரிகின்றது.

ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் பெரும் நெருக்குவாரத்தை எதிர்கொண்டிருக்கும் இலங்கை இந்தச் சமயத்தில் இந்தியா விலகிப் போவதை அனுமதிக்க முடியாது, அதை அரவணைத்துக் கொள்வது அத்தியாவசியமானது என்கின்றார் அவர்.

*“எங்கள் பிரச்சினையை இந்தியா புரிந்து கொள்கின்றது. இந்தியாவுக்குத் தேவை கொழும்புத் துறைமுகத்தில் கால் பதிப்பதேயன்றி, கிழக்கு முனையம் தான் கட்டாயம் என்பதல்ல”* – என்று தமக்கு நெருக்கமானவர்களிடம் அவர் கூறுகின்றார்.

அதே சமயம், கிழக்கு முனையத்தை இந்தியா – ஜப்பான் கூட்டு முயற்சித் திட்டத்துக்குக் கையளிப்பதைத்தான் தொழிற்சங்கங்கள், இடது சாரியினர் எதிர்க்கின்றனர் என்று சுட்டிக் காட்டும் அவர், இந்த இரண்டுக்கும் இடையில் ஓர் இணக்கமான திட்டத்துக்கு அவசரஅவசரமாகக் காரியமாற்றுகின்றார் எனத் தெரிகின்றது.

அமைக்கப்பட்டிருக்கும் கிழக்கு முனையத்தை அப்படியே விட்டுவிட்டு, புதிதாக ஒரு முகத்தை இந்தியா – ஜப்பான் கூட்டுத் திட்டத்தோடு ஆரம்பித்தால் அனைத்துத் தரப்புகளுமே அடங்கி, இணங்கி விடும் எனக் கருதி, அதற்கு அவர் காய் நகர்த்துகின்றார் எனத் தெரிகின்றது.

உரிய அதிகாரிகள், அரசியல்வாதிகளை அழைத்து நீண்ட ஆலோசனை செய்து மாற்றுத் திட்டத்துடன் வர அவர் முயல்கின்றார்.

இந்த விவகாரம் இன்று பெரிதும் சூடு பிடிக்கவுள்ள நிலையில், பிரதமரின் மாற்றுத் திட்டம் சம்பந்தப்பட்ட தரப்புகளினால் ஏற்றுக் கொள்ளப்படுமா, ஏற்பட்டுள்ள அரசியல் அதிர்வுக்கான கொதிநிலையை அது தணிக்குமா என்பவற்றை நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டியிருக்கும்.

– மின்னல் –

## துறைமுகத் தொழிற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முக கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்குவதை நிறுத்துமாறு கோரி தொழிற்சங்கங்கள் முன்னெடுத்து வரும் போராட்டம் மூன்றாவது நாளாகவும் நேற்று தொடர்ந்த நிலையில், அது அரசுக்குள் பல்வேறு கருத்து முரண்பாடுகளைத் தோற்றுவித்துள்ளது.

இந்தநிலையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, துறைமுகத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் இன்று முக்கிய பேச்சில் ஈடுபடவுள்ளார்.

இலங்கை சுதந்திர சேவையர் சங்கத்தின் தலைவர் சுசந்த, இது குறித்து தெரிவிக்கையில்,

துறைமுக தொழிற்சங்கங்கள் முன்னெடுத்துள்ள எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் காரணமாக துறைமுக அதிகார சபைக்கும், அரசுக்கும் பாரிய அளவிலான நட்டம் ஏற்படப்போகின்றது.

இதற்கு நாம் பொறுப்பல்ல. அரசே இதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏற்கனவே நாடு கடனில் நெருக்கப்பட்டுள்ள நிலையில் மேலும் நட்டத்தை ஏற்படுத்தும் தீர்மானங்களை அரசு எடுப்பதன் காரணமாகவே இந்த நிலைமை உருவாகியுள்ளது.

இந்தநிலையில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ எம்முடன் கலந்துரையாட இணக்கம் தெரிவித்துள்ளார். அதற்கமைய இன்று காலை 10 மணிக்கு பிரதமரை நாம் சந்தித்துப் பேச்சுகளை முன்னெடுக்கவுள்ளோம்.

இந்தப் பேச்சில் எமக்கு நல்ல செய்திகள் கிடைக்கும் என நம்புகின்றோம். குறிப்பாக கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையம் முற்றுமுழுதாக துறைமுக அதிகார சபைக்கே கிடைக்கும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது.

ஆனால், அதற்கு இணக்கம் எட்டப்படவில்லை என்றால் நாடு தழுவிய போராட்டங்களை முன்னெடுக்கவும் நாம் தயாராகவே உள்ளோம் – என்றார்.

## யாழ்.ஆய்வுகூடத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தனிமைப்படுத்தல் மையத்தில் ஒருவர், கோப்பாய் சிகிச்சை நிலையத்தில் ஒருவர் என 15 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## 64 ஆயிரத்தைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 64 ஆயிரத்து 157 ஆக அதிகரித்துள்ளது.

தொற்றாளர்களில் 57 ஆயிரத்து 159 பேர் குணமடைந்துள் ளனர் எனவும், 6 ஆயிரத்து 682 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## வடக்கில் இன்று பஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடவடிக்கையால் குணபாலச்செல்வனின் நியமனம் இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவரால் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

சாவகச்சேரி மீசாலையைச் சேர்ந்த செல்லத்துரை குணபாலச்செல்வன், இலங்கை போக்குவரத்துச் சபையில் நீண்ட கால சேவை புரியும் அனுபவமிக்கவர். கடந்த ஆட்சியில் தொழிற்சங்கங்கள் மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக்கையால் அவர் யாழ்ப்பாணம் சாலை முகாமையாளர் பதவியிலிருந்து கொழும்புக்கு மாற்றப்பட்டார்.

மும்மொழித் திறமையுடைய அவர், கடந்த காலங்களில் பல ஊழியர்களின் பதவிநிலை பிரச்சினைகளை சீர் செய்து வழங்கியிருந்தார்.

இந்த நிலையில் செல்லத்துரை குணபாலச்செல்வனுக்கு, வடபிராந்திய பிரதான முகாமையாளராக நேற்றுமுன்தினம் நியமனம் வழங்கப்பட்டது.

அவருக்கு உரிய நியமனக் கடிதத்தை கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் வழங்கிவைத்த நிலையில் இன்று முற்பகல் அவர் பதவி ஏற்க ஏற்பாடாகி இருந்தது.

இந்த நிலையில் செல்லத்துரை குணபாலச்செல்வத்தின் நியமனத்தை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அதனை தடுத்தே தீருவேன் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் , தொழிற்சங்கத்துக்கு உறுதியாகத் தெரிவித்திருந்தார்.

அதனால் வடபிராந்தியத்தின் 7 சாலைகளினதும் தொழிற்சங்கள் நேற்றும் காலை கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நேரில் சந்தித்து எஸ். குணபாலச்செல்வத்தின் நியமனத்தை உறுதி செய்யுமாறு வலியுறுத்தினர்.

அவரது நியமனத்தை நிறுத்தினால் வடபிராந்தியத்தின் 7 சாலைகளின் ஒன்றிணைந்த தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் தெரிவித்தனர். எனினும் நியமனம் நிறுத்தப்படாது என உறுதியளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பணிப்புறப்பணிப்பில் ஈடுபட அவசியம் ஏற்படாது என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில் வடபிராந்திய பிரதான முகாமையாளராக செல்லத்துரை குணபாலச்செல்வத்தை நியமித்தமையை இடைநிறுத்துமாறு இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைவருக்கு போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர் ஒருவர் நியமிக்கப்படுவதை நிறுத்தும் செயலைத் தமிழ் அரசியல்வாதி ஒருவர் மேற்கொள்கின்றமையை ஏற்க முடியாது எனத் தெரிவித்து வடபிராந்தியத்தின் 7 சாலைகளின் தொழிற்சங்கங்களும் இன்று போராட்டத்தில் குதிக்கும் என அறிய முடிகிறது. இதனால் இ.போ.ச. பஸ் சேவைகள் வடக்கில் இடம்பெறுமா என்பது இன்றே தெரியவரும் எனத் தெரிவிக்கப்பட்டது.

## கொழும்புத் துறைமுக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது: –

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை யாருக்கும் விற்பதற்கோ, குத்தகைக்கு விடுவதற்கோ அரசு எந்த வித தீர்மானங்களையும் எடுக்கவில்லை.

இதனால் அது தொடர்பாக தொழிற்சங்கங்களுக்குப் போராட்டங்களை நடத்த வேண்டிய தேவைகள் கிடையாது.

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையம் எங்களின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. இதனை யாருக்கும் கையளிக்க எந்தக் கலந்துரையாடலையும் நடத்தவில்லை.

இதனால் வேலைநிறுத்தப் போராட்டங்களை நடத்த வேண்டிய அவசியமில்லை. என்னிடம் வந்து கதைத்தால் தெளிவுப்படுத்த முடியும்.

அமைச்சரவையில் 99 வீதமானவர்கள் கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை வெளிநாட்டவர்களுக்கு வழங்கக்கூடாது என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளனர். இதனால் ஜனாதிபதியும் இந்த நிலைப்பாட்டுக்கு அப்பால் போகமாட்டார்.

தேசிய வளங்களை விற்பனை செய்வது ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கை. அந்தக் கொள்கையை நடைமுறைப் படுத்த எம்மை மக்கள் தெரிவு செய்யவில்லை – என்றார்.

## 1000 ரூபா நாளாந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எதிர்வரும் 5ஆம் திகதி பணிப் புறக்கணிப்புப் போராட்டத்துக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அறைகூவல் விடுத்துள்ளது.

கொட்டகலை சீ.எல்.எப் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இ.தொ.காவின் பொதுச் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் இந்த அறைகூவலை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு: –

தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை சம்பளத்தை 25 ரூபாவால் உயர்த்தி 725 ரூபாவாகவும், மேலும் 50 ரூபா கொடுப்பனவுடன் வரவுக்கு ஏற்ற கொடுப்பனவு உள்ளிட்ட உற்பத்தித் திறன் அடங்கிய தொகை ஊடாக ஆயிரம் ரூபாவை வழங்குவதற்கு கம்பனிகள் இணக்கம் வெளியிட்டுள்ளன. இந்தத் திட்டத்தை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. அத்துடன் இந்தத் தொகையை வழங்குவதற்காகக் கம்பனி தரப்பில் நிபந்தனைகளும் முன்வைக்கப்பட்டன. அதில் கூட்டு ஒப்பந்தத்தை நான்கு வருடங்களுக்கு ஒரு முறை செய்ய வேண்டும் எனவும், ஒவ்வொரு தோட்டத்திலும் பறிக்கப்படும் கொழுந்தினை இரண்டு கிலோகளாக அதிகரிக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதை நாமும் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாதிடும் தொழிற்சங்கங்களும் நிராகரித்தோம். இந்த நிலையில் எதிர்வரும் 6ஆம் திகதி சம்பள நிர்ணய சபையில் பேச்சு ஒன்று இடம்பெறவுள்ளது.

அதேநேரத்தில் தொழிலாளர்கள், தொழிற்சங்கங்களுக்கிடையில் ஒற்றுமை இல்லை என்பது அவர்களின் எண்ணப்பாடாக உள்ளது. ஆகையால் எதிர்வரும் 5ஆம் திகதி தோட்டங்களில் பணியாற்றும் தொழிலாளர்கள், தொழிலற்றவர்கள் என அனைத்து தரப்பினருடனும் தொழிற்சங்கங்கள் மற்றும் பொது அமைப்புகள் அனைத்தினதும் ஒத்துழைப்புடனும், ஒருநாள் அடையாளப் பணிப் பகிஷ்கரிப்பு ஒன்றை நடத்தி கம்பனிகளுக்கு ஒற்றுமையை வெளிக்கொணரவே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணிப்பகிஷ்கரிப்பு அரசுக்கு எதிரானது அல்ல. மாறாக ஆயிரம் ரூபா சம்பள உயர்வுக்குக்குக் காட்டப்படும் ஒற்றுமைக்காகவே.

இவ்வாறான நிலையில் சம்பள விடயம் தொடர்பில் பல்வேறு தொழிற்சங்கங்கள் அவர்களின் நிலைபாட்டை தெரிவித்து வரும் அதேவேளை பொது அமைப்புகளும் கருத்துகளையும் முன்வைத்து வருகின்றன.

கட்சி என்ற ரீதியில் கொள்கைகள் வேறுபாடாக இருந்தாலும் தொழிலாளர்களின் நியாயமான சம்பளத்தைப் பெற்றுக்கொள்ள அவர்கள் கோரிக்கைகளை முன்வைக்கின்றனர். அந்தவகையில் இந்தப் பணிபகிஷ்கரிப்புக்கு முழுமையான ஆதரவு கிட்டும் என நாம் பொதுவாக அழைப்பு விடுக்கின்றோம் – என்றார்.

## மூவர் பலியெடுப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

38, 68 மற்றும் 69 வயதானோரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். அவர்களில் இருவர் பெண்களாவர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய கொரோனாத் தொற்றால் நாட்டில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 316 ஆக அதிகரித்துள்ளது.

## கொழும்பில் தனிமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள மற்றைய பிரதேசங்கள் தொடர்ந்தும் மறு அறிவித்தல் வரையில் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயலணி தெரிவித்துள்ளது.

# தனிமைப்படுத்தல் நிலையங்கள் அதிகரிக்கப்படும் - சவேந்திரசில்வா



நாட்டுக்கு அழைத்துவர எதிர்பார்க்கப்படும் இலங்கையர்களைத் தங்க வைப்பதற்காக தனிமைப்படுத்தல் நிலையங்கள் அதிகரிக்கப்படும் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் பலாலியில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர், தனிமைப்படுத்தல் நடவடிக்கையில் முப்படையினர் முக்கிய பங்கு வகிக்கின்றனர் எனக் கூறினார்.

புதிய வெளிநாட்டு வருகையாளர்களைத் தனிமைப்படுத்த யாழில் புதிய தனிமைப்படுத்தல் நிலையம் நிறுவப்படவுள்ளதாகவும் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

தனிமைப்படுத்தல் நிலையம் தற்போதைய சூழ்நிலையில் அரசாங்கத்துக்கும் சுகாதார அதிகாரிகளுக்கும் தேவையான அனைத்து பங்களிப்பையும் வழங்குவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டின் இறைமைக்குள் ஐ.நா. ஆணையாளர் கைவைத்தமை தவறு!

## சீறுகிறார் சரத் வீரசேகர



ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளர் நாட்டின் இறைமைக்குள் கைவைப்பதாகப் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும் இராணுவ அதிகாரிகளை முக்கிய பதவிகளில் அமர்த்தும் நடவடிக்கை தொடர்பாக ஜனாதிபதிக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் அவரது அறிக்கை முற்றிலும் பிழையானது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி கூட ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகளை முக்கிய பதவிகளில் நியமித்துள்ளார் எனவும் சரத் வீரசேகர சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த அரசாங்கத்தின் சார்பாக அமெரிக்காவின் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கிய முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவே தற்போதைய நிலைமைக்குக் காரணம் என சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

எனவே இந்த விடயங்களில் பொதுமக்கள் அச்சப்படத் தேவையில்லை என்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சிறந்த முடிவை எடுப்பார் என்றும் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தான் பிரதமர் 23 இலங்கைக்கு!

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் எதிர்வரும் பெப்ரவரி 23 ஆம் திகதி இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்தத் தகவலை வெளியுறவு செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜெயநாத் கொலம்பேஜ் உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்த விஜயத்தின் மூலம் கடந்த ஆண்டு முதல் தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு விஜயம் செய்த முதல் அரசாங்கத் தலைவராக அவர் இருப்பார்.

இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கரின் கொழும்புக்கான மூன்று நாள் விஜயத்தின் ஒரு மாதத்திற்குப் பிறகு இம்ரான் கானின் திட்டமிட்ட விஜயம் அமையவுள்ளது.

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் கடந்த 2016 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அழைப்பின் பேரில் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் செய்திருந்தார்.

யுத்த காலத்தில் இலங்கைக்கு இராணுவ உதவிகளை வழங்கிய நாடுகளில் பாகிஸ்தான் ஒன்றாகும். கடந்த காலத்தில் ஐ.நா. மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு ஆதரவாக பாகிஸ்தானும் முக்கிய பங்கு வகித்தமையும் குறிப்பிடத்தக்கது.

# நுவரெலியாவில் நில அதிர்வு!

நுவரெலியா, வலப்பனை பகுதியில் நேற்றுக் காலை சிறிய அளவிலான நிலநடுக்கம் ஒன்று உணரப்பட்டுள்ளதாக புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த நில அதிர்வானது ரிச்டெர் அளவுகோலில் 2 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது.

# கிளிநொச்சி உருத்திரபுரீஸ்வரர் ஆலயத்திலும் தொல்லியல் திணைக்களம்? - மக்கள் பதற்றம்



கிளிநொச்சி – உருத்திரபுரம், உருத்திரபுரீஸ்வரர் ஆலயத்திலும் தொல்லியல் அடையாளம் இருப்பதாக தொல்லியல் திணைக்களம் ஆராய்வதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி உருத்திரபுர சிவன் ஆலயத்துக்கு அருகில் தொல்லியல் அடையாளங்கள் இருக்கின்றன எனக் கூறி அகழ்வாராய்ச்சி மேற்கொள்வதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தொல்லியல் திணைக்களத்தினர் அண்மையில் குறிப்பிட்டனர் என அந்தப்பகுதி மக்கள் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் கடந்த சனிக்கிழமை அந்தப் பகுதிக்கு பௌத்த தேரர் ஒருவர் நண்பகல் வேளையில் வருகை தந்தார் எனவும் பிக்கு சென்ற சில மணித்தியாலங்களின் பின்னர் அந்தப் பகுதிக்கு பொலிஸார் வந்தனர் எனவும் பின்னர் மாலை வேளையில் இராணுவத்தினர் வருகை தந்து அந்த இடத்தைப் பார்த்து சென்றனர் எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவத்தால் அந்தப் பகுதியில் தொடர்ந்து பரபரப்பான நிலை காணப்படுகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# நாளாந்தம் ஆயிரம் தொற்றாளர் இனங்காணும் நிலைமை வரும்!

## அரச மருத்துவ சங்கம் எச்சரிக்கை

நாட்டில் நாளாந்தம் 750 பேர் வரையிலான தொற்றாளர்கள் இனங்காணப்படக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது. வைரஸ் பரவல் வழிமுறைகளை முறையாக மதிப்பீடு செய்யாவிட்டால் எதிர்வரும் நாள்களில் நாளாந்தம் ஆயிரம் தொற்றாளர்கள் இனங்காணப்படக் கூடிய நிலைமையும் ஏற்படும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

எதிர்காலத்தில் மரணங்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்பதோடு, குறிப்பாக மேல் மாகாணத்துக்கு வெளியில் மரணங்கள் அதிகரிக்கக் கூடிய வாய்ப்புக்கள் ஏற்படும் என்றும் அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஹரித அலுத்கே கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

கண்டி, இரத்தினபுரி, குருணாகல் ஆகிய சில மாவட்டங்களில் நாளொன்றுக்கு 50 தொற்றாளர்கள் இனங்காணப்படும் நிலை காணப்படுகிறது. அநுராதபுரத்தில் இராணுவ முகாம்கள் அல்லது இராணுவ பயிற்சி முகாம்களில் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இவ்வாறான நிலையில் சுதந்திர தினக் கொண்டாட்டங்களுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவற்றில் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொள்வார்கள் என்பதால் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். வைத்தியசாலைகளிலிருந்து வீட்டுக்கு அனுப்புகின்றமை தொடர்பில் சர்வதேச மட்டத்தில் மதிப்பீடு செய்து அதற்கான வழிகாட்டல்களை வெளியிட்டதன் காரணமாகவே நாளொன்றுக்கு ஆயிரத்துக்கும் அதிகமானோரை குணப்படுத்தி வீடுகளுக்கு அனுப்ப முடிந்துள்ளது.

இதே போன்று நாளாந்தம் பதிவாகின்ற மரணங்களின் எண்ணிக்கை ஆரம்பத்தில் சராசரியாக 3 – 4 இற்கு இடையிலேயே காணப்பட்டது. ஆனால், தற்போது நாளொன்றுக்கு 7 – 8 மரணங்கள் பதிவாகின்றன. இது எதிர்காலத்தில் முகங்கொடுக்கப் போகும் ஏதேனும் அபாய நிலைக்கான எச்சரிக்கையா என்பதை ஆழமாக மதிப்பீடு செய்ய வேண்டும்.

ஆரம்பத்தில் கொழும்பு மாநகரசபையை அண்மித்த பகுதிகளிலேயே நூற்றுக்கு 90 வீதமான மரணங்கள் பதிவாகின. ஆனால், வெள்ளியன்று பதிவான 8 மரணங்களில் அனைத்தும் கொழும்பு மாநகரசபைக்கு வெளியிலேயே பதிவாகியுள்ளன. 8 இல் 5 மரணங்கள் கொழும்பு மாவட்டத்துக்கு வெளியில் பதிவாகியுள்ளன. 8 இல் 3 மரணங்கள் மேல் மாகாணத்துக்கு வெளியில் பதிவாகியுள்ளன.

மேல் மாகாணத்தில் அபாய நிலை நூற்றுக்கு 50 சதவீதம் குறைவடைந்து ஏனைய பகுதிகள் அதிகரித்துள்ளதைப் போலவே, மரணங்களின் எண்ணிக்கையிலும் நிகழ்கின்றது. எதிர்காலத்தில் மரணங்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்பதோடு, மேல் மாகாணத்துக்கு வெளியில் மரணங்கள் அதிகரிக்கக் கூடிய வாய்ப்புக்கள் ஏற்படும் என்பது இதன் மூலம் தெளிவாகிறது என்றும் அவர் மேலும் கூறினார்.

# சுகாதார வழிமுறைகளை மீறிய 2 ஆயிரத்து 905 பேர் கைது!

கொழும்பு, ஜன.01

முகக்கவசம் மற்றும் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றத் தவறியமைக்காக நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 6.00 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரப் பகுதியில் 52 நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் 2 ஆயிரத்து 905 நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தனிமைப்படுத்தல் சட்டத்துக்கு இணங்காத நபர்களைக் கண்டறிவதற்கான சிறப்பு நடவடிக்கை நாடு முழுவதும் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

# 24 மணிநேரத்தில் 39 விமானசேவை இலங்கையில் முன்னெடுக்கப்பட்டது!

கொழும்பு, ஜன.01

இலங்கையில் கடந்த 24 மணிநேரத்தில் 39 விமான சேவைகள் ஊடாக ஆயிரத்து 135 பேர் பயணங்களை மேற்கொண்டுள்ளனர் எனக் கட்டுநாயக்க விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 8.30 அளவில் நிறைவடைந்த 24 மணிநேர காலப்பகுதிக்குள், குறித்த பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கட்டுநாயக்க விமான நிலையத் தகவல்கள் ஊடாக அறிய முடிகின்றது.

இதேவேளை, கொரோனாத் தொற்று அச்ச நிலைமை காரணமாக 681 பேர் 20 விமானங்களின் ஊடாக நாடு திரும்பியுள்ளனர்.

இதேபோன்று தொழில் நிமித்தம் கட்டார் சென்றிருந்த நிலையில் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு உள்ளாகினர் எனக் கூறப்படும் 293 பேர் நாடு திரும்பியுள்ளனர்.

இவர்கள் அனைவரும் அரசாங்கத்தின் விசேட வேலைத்திட்டத்தின் ஊடாகவே நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இதற்கமைய டுபாயிலிருந்து 83 பேரும் அபுதாபியிலிருந்து 77 பேரும் பாகிஸ்தானிலிருந்து 39 பேரும் பங்களாதேஷிலிருந்து 34 பேரும் இவ்வாறு நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இந்த அனைவருக்கும் விமான நிலையத்திலேயே பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஈஸ்டர் தாக்குதல் பின்னணி: இனியாவது வெளியே வருமா?

நாட்டை ஓர் உலுப்பு உலுப்பிய – நாட்டின் அரசியல் செல்நெறியையே புரட்டிப் போடக் காரணமாக அமைந்த – ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதல்கள் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை – பரிந்துரை – ஒருவாறாக இன்று ஜனாதிபதி கோட்டாபயவிடம் கையளிக்கப்படவிருக்கின்றது.

தொடர் குண்டுத் தாக்குதல் தொடர்பாக – அதன் பின்புலத்தில் புதைந்து கிடக்கும் மர்மங்கள் துலங்கும் விதத்தில் – அந்த மோசமான அவல நிலைமை ஏற்படுவதற்கு இடமளித்துப் பொறுப்பற்றுச் செயற்பட்டவர்கள் சம்பந்தமாக – காத்திரமான விடயங்கள் எவற்றையேனும் இந்த ஆணைக்குழு வெளியே கொண்டு வருமா என்பது தெரியவில்லை. அல்லது 'மலையக் கெல்லி எலியைப் பிடித்த மாதிரியான' கதை ஏதோடும் அதன் அறிக்கை அடங்கி விடுமோ என்பதும் தெரியவில்லை.

இந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகள் வெளியே அம்பலப்படுத்தப்படுமா என்பதே முதலில் பிரதான கேள்வியாகும். முன்னைய பல ஆணைக் குழுக்களின் பரிந்துரைகள் கிடப்பில் போடப்பட்டுப் பின்னர் காணாமல்போன மாதிரி இதுவும் காலகதியில் மாயமானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அல்லது பொறுப்புக் கூறல் சம்பந்தமாக ஆணைக்குழுக்கள், விசாரணைக் குழுக்கள் சமர்ப்பித்த முன்னைய அறிக்கைகளைப் பரிசீலித்து, அவற்றில் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலும் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறல் சம்பந்தமாகவும் ஏதேனும் உள்ளனவா என்று கண்டறிவதற்கு தனியான ஒரு ஜனாதிபதி ஆணைக் குழுவை நியமித்த மாதிரி, இந்த ஆணைக் குழுவின் அறிக்கையையும் படித்துப் பரிசீலித்து பரிந்துரைக்க இன்னொரு ஆணைக்குழுவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமிக்கும் நிலைமை கூட வந்தாலும் வரலாம்.

2019 செப்ரெம்பரில் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்டது இந்த ஆணைக்குழு. அது 2019 ஒக்ரோபரில் தனது விசாரணைகளை ஆரம்பித்தது. அதன் பதவிக் காலம் அவ்வப்போது முடிய முடிய அது பல தடவைகள் நீடிக்கப்பட்டு, இறுதியாக வழங்கப்பட்ட கால நீடிப்பு நேற்றுடன் முடிவடைந்தது. இன்று இறுதி அறிக்கை சமர்பிக்கப்படுகின்றது.

ஆணைக்குழு நீண்ட, மரதன் விசாரணைகளை நடத்தி முடித்திருக்கின்றது. 214 நாள்களில் 640 அமர்வுகளை அது நடத்தியுள்ளது. 451 சாட்சிகளின் சாட்சிகள், குறுக்கு விசாரணைப் பதிவுரை இடம்பெற்றுள்ளன.

இதில் வேடிக்கை என்னவென்றால் இந்த ஆணைக்குழுவை நியமித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே பின்னர் அதன் முன்னால் சாட்சியமாக முன்னிலையாக வேண்டி நேர்ந்தது. குறுக்கு விசாரணைகளுக்குப் பதிலளிக்க வேண்டியிருந்தது.

உயர் நீதிமன்ற நீதியரசர் ஜனக் டி சில்வா தலைமையிலான இக்குழுவில் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் பந்துல கருணாரட்ன, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதியரசர் சுனில் ராஜபக்ஷ, ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி பந்துல அத்தபத்து, நீதி அமைச்சின் ஓய்வு பெற்ற செயலாளர் டபிள்யூ.எம்.எம்.ஆர்.அதிகாரி ஆகியோர் ஏனைய உறுப்பினர்கள்.

ஏற்கனவே ஆணைக்குழு இரண்டு இடைக்கால அறிக்கைகளை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளது. இன்று இறுதி அறிக்கை கையளிக்கப்படவுள்ளது.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை விரைந்து முடிந்து, குற்றமிழைத்தோரை சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டிக்குமாறு கர்தினால் மல்கம் ரஞ்சித் வலியுறுத்தி வருகையில் இந்த அறிக்கை முன்வைக்கப்படுகின்றது.

இந்தத் தொடர் குண்டத் தாக்குதல்களுக்கு பல முஸ்லிம் தலைவர்களில் இருந்து முன்னைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வரை பலர் பொறுப்புக் கூற வேண்டும் என்ற குற்றச்சாட்டு தெற்கில் பரவலாக முன்வைக்கப்பட்டு வருகையில் இந்த அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படுவது அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது.

கொழும்புத் துறைமுகக் கிழக்கு முனைய விவகாரம் அரசியல் நெருக்கடிகளைத் தோற்றுவித்திருக்கும் தற்போதைய சூழலில், முன்னைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான பங்காளிக் கட்சிகளைக் கட்டிப் போட்டு, எகத்தாளம் பண்ண விடாமல், ஆளும் தரப்புக்குள் அடங்கி நிற்பதற்கான மந்திரமாக, இந்த ஆணைக்குழுவின் அறிக்கைப் பூச்சண்டியை ஜனாதிபதி பயன்படுத்த விழையலாம்.

இந்த ஆணைக்குழு சில சமயங்களில் தனது அமர்வில் சாட்சியப் பதிவு மற்றும் குறுக்கு விசாரணைகளை நள்ளிரவு வரை தொடர்ந்து நடத்தியிருக்கின்றது.

அப்படி மரதன் அமர்வுகளை நடத்தி அது கண்டுபிடித்தது என்ன? சாதித்தவை யாது?

அதன் இறுதி அறிக்கையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெளியே விட்டால்தான் ஏதேனும் தெரியவரும்...!

## பொலிஸ் வைத்தியசாலை நிர்வாகப்பிரிவுக்கு இன்று தடுப்பூசி என்கிறார் அஜித் றோஹண!



இந்தியாவினால் வழங்கப்பட்டுள்ள ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ரசெனிகா கொவிட் – 19 தடுப்பூசிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை பொலிஸ், வைத்தியசாலையின் நிர்வாகப்பிரிவினருக்கு வழங்கப்படுகின்றன எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

அவர் மேலும் கூறிவை வருமாறு:–

அஸ்ட்ரசெனிகா கொவிட் – 19 தடுப்பூசிகள் வைத்திய பிரிவினருக்கும், இராணுவத்தினருக்கும் வழங்கப்பட்டுள்ளன.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பொலிஸ், வைத்தியசாலையில் நிர்வாகப்பிரிவினருக்கும் வழங்கப்படுகின்றது. கண்டி – குண்டசாலை பகுதியில் அமைந்துள்ள பொலிஸ், வைத்தியசாலையின் நிர்வாகப்பிரிவினருக்கும் பெப்ரவரி 2 ஆம் திகதி தடுப்பூசி வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## அம்பலாங்கொடை கிராமிய வங்கி கொள்ளை; விமானப்படை சிப்பாயிடம் கைக்குண்டுகள் மீட்பு!

அம்பலாங்கொட பகுதியில் கிராமிய வங்கி ஒன்றில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் தொடர்பில் விமானப்படை சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளமையோடு அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித்றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

அம்பலங்கொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாதம்பே பகுதியில் அமைந்துள்ள கிராமிய வங்கியொன்றில் கடந்த வெள்ளிக்கிழமை ஒரு லட்சத்து 36 ஆயிரம் ரூபா பணம் கொள்ளையிடப்பட்டிருந்தது. இனந்தெரியாத நபரொருவர் வங்கியின் முகாமையாளரை கைகுண்டு மற்றும் துப்பாக்கியைக் காண்பித்து அச்சுறுத்தி இவ்வாறு பணத்தை கொள்ளையிட்டுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

சம்பவத்தின் போது விரைந்து செயற்பட்ட பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் உடனே சந்தேக நபரை மடக்கிப்பிடித்திருந்தனர். இவ்வாறு பணத்தை கொள்ளையிட்ட நபர் சீனக்குடா விமானப்படை முகாமின் சிப்பாய் ஒருவர் என்று தெரியவந்துள்ளது. சந்தேக நபரைக் கைது செய்துள்ள பொலிஸார், அவரிடமிருந்து வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு கைக்குண்டுகள் இரண்டு, விளையாட்டு துப்பாக்கி மற்றும் கொள்ளையிட்ட பணம் என்பவற்றைக் கைப்பற்றியுள்ளனர்.

அம்பலங்கொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## இந்தியத் தடுப்பூசி உள்நோக்கம் கொண்டது என்றால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது!

### பிமல் ரத்நாயக்க காட்டம்



இந்தியா இலங்கைக்கு தடுப்பூசி வழங்கியமை, உள்நோக்கமாக இருந்தால் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

சனிக்கிழமை வவுனியாவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவிக்கையில் –

இந்தியாவால் இலங்கைக்குத் தடுப்பூசி வழங்கியமையானது எந்தவித பிரதி உபகாரம் இல்லாமலோ அல்லது எந்தவித உள்நோக்கம் இன்றி வழங்கியிருந்தால் அதனை நாங்கள் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறோம்.

ஆனால், இலங்கை துறைமுகத்தை பெற்றுக்கொள்வதற்காகதான் இந்த தடுப்பூசியை வழங்கியிருந்தால் அதனை நாங்கள் சாதகமாக ஏற்றுக்கொள்ள முடியாது. அவ்வாறு இருந்தால் இந்தச் செயற்பாட்டை நாங்கள் ஓர் உள்நோக்கம் கொண்டதாகவே பார்க்கிறோம்.

இவ்வாறான செயற்பாடுகளை இந்தியா மேற்கொள்ளக் கூடாது. இதேவேளை, இந்தச் செயற்பாட்டுக்கு இலங்கை அரசாங்கமும் உடந்தையாகப் போகக் கூடாது.

இலங்கையில் எந்த பகுதியாக இருந்தாலும் சரி குறிப்பாக அம்பாந்தோட்டையை சீனாவிற்கு வழங்கியமை, அதேபோன்று கொழும்பு துறைமுகத்தை வழங்குவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகவே நாங்கள் பார்க்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## வவுனியாவில் ஒரேநாளில் 905 பேருக்குத் தடுப்பூசி!



வவுனியாவில் ஒரே நாளில் 905 பேருக்கு கொவிட்19 தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

இந்தியாவால் நன்கொடையாக வழங்கப்பட்ட கொவிட் – 19, 'கொவிஷெட்' தடுப்பூசிகள் வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களிலும் மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவ சேவையாளர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், ஊழியர்கள்கள் மற்றும் இராணுவத்தினருக்கு ஏற்றும் பணி கடந்த சனிக்கிழமை முதல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், வவுனியா மாவட்டத்துக்கு ஆயிரத்து 700 டோஸ்கள் தடுப்பூசி மருந்துகள் வழங்கப்பட்டன. அதனைச் செலுத்தும் பணிகள் வவுனியா வைத்தியசாலை மற்றும் வன்னி பாதுகாப்பு படைத்தலைமையகத்தில் சனிக்கிழமை முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன்போது 297 பேர் வவுனியா வைத்தியசாலை சார்ந்தவர்களுக்கும் 108 பேர் சுகாதாரத் துறை சார்ந்தவர்களுமாக 405 பேருக்கு வவுனியா வைத்தியசாலையிலும், 500 இராணுவத்தினருக்கு வன்னி பாதுகாப்பு படைத்தலைமையகத்திலும் தடுப்பூசி செலுத்தப்பட்டது.

# இரண்டாம் கட்டத் தடுப்பூசிகள் பொதுமக்களுக்கு ஏற்றப்படும்!

## ஹேமந்த ஹேரத் அறிவிப்பு




இந்தியாவிடம் இருந்து இரண்டாம் கட்டமாக பெற்றுக்கொள்ளவுள்ள ஒக்ஸ்போர்ட் – அஸ்ட்ரசெனிகா கொரோனாத் தடுப்பூசிகளை அடுத்த மூன்று வாரங்களில் இலங்கைக்கு கொண்டுவரவுள்ளதாக சுகாதாரப் பணியகம் தெரிவித்துள்ளது.

சீனாவின் தடுப்பூசிகளும் அதே காலகட்டத்தில் வருகின்றமையால் பொதுமக்களுக்கு இவற்றைப் பயன்படுத்த முன்னாயத்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன எனவும் பிரதி சுகாதார பணிப்பாளர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட ஒக்ஸ்போர்ட் – அஸ்ட்ரசெனிகா கொவிட் – 19 தடுப்பூசிகளை ஆறு வைத்தியசாலைகளில் பயன்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட நிலையில், அடுத்த மூன்று தினங்களில் இந்தத் தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்வதற்கான நாள்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. எனினும் முதல் கட்டமாக ஐந்து லட்சம் தடுப்பூசிகளை இலங்கையில் பயன்படுத்தவே வாய்ப்புகள் கிடைத்துள்ள காரணத்தால் மக்களுக்கு இவற்றை ஏற்றிக்கொள்ள இன்னமும் அனுமதி வழங்கப்படவில்லை.

இந்நிலையில், இந்தியாவில் இருந்து இரண்டாம் கட்டமாக மேலும் ஐந்து லட்சம் அல்லது அதற்கும் சற்று அதிகமான ஒக்ஸ்போர்ட் – அஸ்ட்ரசெனிகா வைரஸ் தடுப்பூசிகளை மூன்று வாரங்களில் இலங்கைக்கு கொண்டுவரும் ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என சுகாதாரப் பணியகம் தெரிவித்துள்ளது. இவ்வாறு கொண்டுவரும் ஒக்ஸ்போர்ட் – அஸ்ட்ரசெனிகா தடுப்பூசிகளை பொதுமக்களுக்கு பயன்படுத்த முடியும் எனவும், 60 வயதிற்கு மேற்பட்ட நபர்களுக்கு இந்தத் தடுப்பூசிகளை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதாரப் பணியகம் தெரிவிக்கின்றது.

எவ்வாறாயினும், 60 வயதிற்கு மேற்பட்ட 38 லட்சத்துக்கும் அதிகமான பொதுமக்கள் நாட்டில் வாழ்கின்றனர். எனவே, அவர்கள் அனைவருக்கும் ஒரே நேரத்தில் தடுப்பூசிகளை பெற்றுக்கொடுக்க முடியாது. ஆகவே, விசேட தேவைகொண்ட நபர்களுக்கும், தொற்றா நோய்களில் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ள நபர்களையும் கருத்தில் கொண்டு அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் எனவும் பிரதி சுகாதார பணிப்பாளர் தெரிவித்தார்.

இந்நிலையில், பெப்ரவரி மாதம் நடுப்பகுதியில் சீனாவில் இருந்தும் 'சைனோபோர்ம்' கொரோனா வைரஸ் தடுப்பூசிகளை இலங்கைக்குக் கொண்டுவரப்படவுள்ளதாகவும், இந்தியாவில் இருந்தும், சீனாவில் இருந்து கொண்டுவரப்படும் தடுப்பூசிகள் ஒரே காலகட்டத்தில் இலங்கைக்குக் கிடைக்கும் நிலையில் அதனையும் பயன்படுத்தி இலங்கையின் தற்போது உள்ள நிலைமைகளைக் கட்டுப்படுத்த முடியும் எனவும் பிரதி சுகாதார பணிப்பாளர் தெரிவித்தார்.

# பாகிஸ்தான் செல்லும் இலங்கையருக்கு பி.சி.ஆர். அறிக்கை தேவையில்லையாம்!

பாகிஸ்தானுக்கு வரும் இலங்கையர்கள், நாட்டுக்கு வரும்போது பி.சி.ஆர். சோதனை அறிக்கையை முன்வைக்கத் தேவையில்லை என்று பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தானின் சிவில் ஏவியேன் ஆணையம் வெளியிட்டுள்ள உள்வரும் பயணிகளுக்கான திருத்தப்பட்ட பயண ஆலோசனையிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளது.

பயணத்திற்கு முன்னர் கொவிட் – 19 சோதனைக்கு வெவ்வேறு வழிமுறைகளுடன் பாகிஸ்தானின் சிவில் ஏவியேன் ஆணையம் நாடுகளை மூன்று பிரிவுகளாக பிரித்துள்ளது.

A பிரிவில் – ஆஸ்திரேலியா, சீனா, ஈராக், நியூசிலாந்து, கட்டார், ஐஸ்லாந்து, இலங்கை, மற்றும் சவுதி அரேபியா உள்ளிட்ட 24 நாடுகள் உள்ளன.

C பிரிவில் – தென்னாபிரிக்கா, பிரிட்டன், பிரேஸில், அயர்லாந்து, போர்த்துக்கல் மற்றும் நெதர்லாந்து உள்ளிட்ட ஆறு நாடுகள் உள்ளன.

B பிரிவில் – ஏ மற்றும் சி பிரிவில் வராத அனைத்து நாடுகளும் அடங்கும்.

A பிரிவில் உள்ள நாடுகளைச் சேர்ந்த பயணிகள் பாகிஸ்தான் வருவதற்கு பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கையை வழங்கத் தேவையில்லை. அதேசமயம் B பிரிவில் உள்ள நாடுகளைச் சேர்ந்த பயணிகள் பாகிஸ்தான் வருவதற்கு முன்னர் 72 மணிநேரத்திற்குள் எடுத்த பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

C பிரிவில் உள்ள நாடுகளைச் சேர்ந்த பயணிகள் பாகிஸ்தான் நுழைவதற்கு தடைசெய்யப்பட்டுள்ளதுடன் தேசிய கட்டளை மற்றும் செயற்பாட்டு மையத்தின் முடிவுகளால் வழிநடத்தப்படுபவர்கள் மாத்திரமே அனுமதிக்கப்படுவார்கள்.

# இணையவழியூடாக நிதி மோசடி ஈடுபட்ட நபர் ஒருவர் சிக்கினார்!

பொருள்களை விற்பனை செய்வதற்கான இணையவழி விளம்பரங்கள் மூலம் பொதுமக்களை ஏமாற்றி நிதி மோசடி செய்த குற்றச்சாட்டில் ஒருவர் வெலிகமவில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் 29 வயதுடைய நாரஹேன்பிட்டி பகுதியைச் சேர்ந்தவர் ஆவார்.

சந்தேக நபருக்கு பல்வேறு தேசிய அடையாள அட்டை எண்களின் கீழ் பல வங்கி கணக்குகள் இருக்கின்றன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது போன்ற குற்றச்சாட்டுடன் தொடர்புடையவர்கள் தொடர்பாக முறையிடப் பொதுமக்கள் 0718 591753 என்ற குற்றப்புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளரின் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட் டுள்ளது.

# தொழிலாளர் தேசிய சங்கத்தில் இருந்து விலகினார் திலகராஜ்!



தொழிலாளர் தேசிய சங்கத்தில் இருந்து தான் ஒதுங்கியுள்ளார் என தொழிலாளர் தேசிய முன்னணியின் பொதுச்செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.திலகராஜ் அறிவித்துள்ளார்.

ஹற்றனில் நேற்று (ஞாயிற்றுக் கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். எம்.திலகராஜ் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

நான் நாடாளுமன்ற உறுப்பினராக செயற்பட்ட காலப்பகுதியில் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயம் தொடர்பில் முக்கிய 3 பிரேரணைகளை முன்வைத்திருந்தேன்.

இதில் குறிப்பாக சம்பள விவகாரத்தில் அரசாங்கம் தலையிட வேண்டும் என்பதை இரு பிரேரணைகள் வலியுறுத்தின. அந்தக் கோரிக்கை தற்போது வெற்றியளித்துள்ளது. இதன்காரணமாகவே கால்நூற்றாண்டு காலமாக பாராமுகம் காட்டிய அரசாங்கம், இன்று தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள விடயத்தில் தலையிட்டுள்ளது.

மேலும்சம்பளவிகாரத்தில்அமைச்சரவையில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டாலும் அவை நடைமுறைக்கு வருவதில் தொடர்ச்சியாகத் தோல்விகளே ஏற்பட்டுள்ளன. பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என நிறைவேற்று அதிகார ஜனாதிபதியே கட்டளையிட்டிருந்தார். அந்தக் கட்டளைகூட நிறைவேற்றப்படவில்லை. அவ்வாறு செய்வதற்கு தடையாகக் கூட்டு ஒப்பந்த முறைமையே இருக்கின்றது.

எனவேதான், தோட்டத் தொழிலாளர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்க வேண்டும் என்ற யோசனையையும் நாடாளுமன்றத்தில் முன்வைத்தேன். தென்பகுதி மக்களைப்போல மலையக மக்களையும் சிறுதோட்ட உரிமையாளர்களாக்குவதே சகல வழிகளிலும் சாத்தியமான தீர்வாக அமையும் என நம்புகின்றேன். அதேவேளை, தொழிலாளர் தேசிய சங்கத்தில் இருந்து நான் ஒதுங்கியுள்ளேன். ஆனாலும் தொழிலாளர் தேசிய முன்னணியின் பொதுச்செயலாளராக நானே செயற்படுகின்றேன். யாப்பை எழுதி, அதனைப் பதிவு செய்து, ஸ்தாபக பொதுச்செயலாளராக நானே செயற்படுகின்றேன்.

தேர்தலொன்று அறிவிக்கப்பட்டு, அதில் தொழிலாளர் தேசிய சங்கம் தனித்துப் போட்டியிடும் பட்சத்தில், அப்போது அரசியல் பிரிவு குறித்து தீர்மானம் எடுக்கப்படும். தேர்தலொன்று அறிவிக்கப்படாத காலக்கட்டத்தில் அது பற்றிக் கதைப்பதில் பயனில்லை. – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டைப் பாதுகாப்போமென ஆட்சிக்கு வந்தவர்கள் இன்று கிழக்கு முனையத்தை காக்கமுடியாத நிலை!

## பொறியியல் சேவைகள் வல்லுநர்கள் சங்கம் கிண்டல்



கொழும்பு, பெப்.01

நாட்டை பாதுகாப்பதாக குறிப்பிட்டு வந்தவர்கள் இன்று கிழக்கு முனையத்தைக் கூடப் பாதுகாத்துக்கொள்ள முடியாத நிலையில் காணப்படுகிறார்கள்.

கிழக்கு முனையத்தை இந்திய நிறுவனத்துக்கு வழங்கினால் இந்திய – சீன அதிகாரப் போட்டிக்கு இலங்கை பழியாக்க வேண்டிய நிலை ஏற்படும் என பொறியியல் சேவைகள் வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் லந்த நாகொட தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள சன சமூக கேந்திர மத்திய நிலையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில்மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்திய நிறுவனத்துக்கு வழங்கவேண்டிய கட்டாயம் இருப்பதாக அரசாங்கம் குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

கொழும்பு துறைமுகத்தில் கிழக்கு முனையத்தின் ஊடாகவே அதிக வருவாய் கிடைக்கப் பெறுகின்றன. பிற நாட்டு தரப்பினருக்கு வழங்கப்பட்ட முனையங்கள் ஊடாகக் கிடைக்கப்பெறும் வருமானம் குறைவானதாக உள்ளது.

உலக துறைமுக தரவரிசை பட்டியலில் கொழும்பு துறைமுகம் 24 ஆவது இடத்திலும், இந்தியாவின் ஜவஹர்லால் நேரு துறைமுகம் 29 ஆவது இடத்திலும் உள்ளது வலய அடிப்படையில் பார்க்கையில் இலங்கையின் கொழும்பு துறைமுகம் முன்னணியில் உள்ளது.

கிழக்கு முனையத்தை அபிவிருத்தி செய்வதற்காக இந்திய நிறுவனத்துக்கு வழங்குவதாகக் குறிப்பிடும் செய்தி நகைப்புக்குரியது.

இந்தியாவின் அதானி நிறுவனத்துக்கு எதிராக அந்நாட்டு மக்கள் எதிர்ப்பு போராட்டங்களை முன்னெடுத்து வருகின்ற நிலையில், அரசாங்கம் இந்திய நிறுவனத்துக்குக் கிழக்கு முனையத்தை அபிவிருத்தி செய்ய வழங்குகின்றமை பாரிய விளைவை ஏற்படுத்தும்.

அதானி நிறுவனம் தற்போது இந்தியாவில் துறைமுகமொன்றை அபிவிருத்தி செய்து வருகின்றது. இவ்வாறான நிலையில் இலங்கையின் கிழக்கு முனையத்தை கொள்வனவுசெய்ய முயற்சிப்பதுகொழும்புத் துறைமுகத்தை பலவீனப்படுத்தும் ஒரு செயற்பாடாகவே கருதப்படும்.

கொழும்புதுறைமுகத்தில்உள்ளபிரதான முனையங்கள் அனைத்தும் பிற நாட்டு நிறுவனங்களுக்கு வழங்கினால் எதிர்காலத்தில் துறைமுகத்தில் இலங்கைக்குச் சொந்தமான முனையத்துக்கு கப்பல்கள் வரமுடியாத நிலை ஏற்படும்.

அரசாங்கம் பொருளாதாரப் பிரச்சினை தொடர்பாக மாத்திரமே கவனம் செலுத்துகிறது. கொழும்பு துறைமுகத்தில் தற்போது சீன நிறுவனமும் பங்குதாரராக செயற்படுகிறது. இந்நிலையில் இந்தியாவையும் இணைத்துக்கொள்வது சீனா – இந்திய அதிகாரப் போட்டிக்கு இலங்கை பழியாக வேண்டும்.

நாட்டைப் பாதுகாப்பதாகக் குறிப்பிட்டுக் கொண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம் தற்போது கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தைக் கூடப் பாதுகாக்க முடியாமல் பலவீனமடைந்துள்ளது.

அரசாங்கத்துக்கு கிழக்கு முனையத்தை அபிவிருத்தி செய்ய முடியாவிட்டால் துறைமுக தொழிற்சங்கத்துக்கும், பொறியியலாளர் சங்கத்துக்கும் தாருங்கள். நாங்கள் குறுகிய காலத்திற்குள் அபிவிருத்தி செய்கிறோம். – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# கடன் நெருக்கடியில் இலங்கை விலைபோவதாக எச்சரிக்கை!

## விடுத்தார் சம்பிக்க



நாடு செலுத்த வேண்டிய வெளிநாட்டுக் கடன்களின் தொகை அதிகரித்துக்கொண்டே செல்வதாகவும், இந்த ஆண்டில் மாத்திரம் அண்ணளவாக 700 கோடி அமெரிக்க டொலர்கள் சர்வதேசக் கடன்களைச் செலுத்த வேண்டியுள்ளதாக எதிர்க்கட்சி உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். அடுத்த இரண்டு ஆண்டுகளில் மிக மோசமான கடன் நெருக்கடியில் இலங்கை தள்ளப்படும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் –

வெளிநாடுகளுடன் டொலர்களில் செய்யும் கணக்கு வழக்குகளை மூன்றுமாத காலத்துக்கு நிறுத்துமாறு சகல வங்கிகளுக்கும் மத்திய வங்கி அறிவித்தல் ஒன்றை வழங்கியுள்ளது. ஏனென்றால் வெளிநாடுகளிடம் டொலர்களில் பெற்றுக்கொண்ட கடன்களைச் செலுத்தவேண்டிய நிலையில் கடந்த ஆண்டில் 20 கோடி அமெரிக்க டொலர்களைச் செலுத்தியாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

எனவே, நாட்டிலுள்ள சகல வங்கிகளில் இருந்தும் 20 கோடி அமெரிக்க டொலர்களை பெற்றுத்தருமாறு மத்தியவங்கி தெரிவித்திருந்தது. இது நூறுக்கு ஒரு வீத வட்டிவீதத்தில் தருமாறு கோரிக்கை விடுத்தனர். ஆனால் எந்தவொரு வங்கியும் ஒரு வீத வட்டிக்கு பணத்தை வழங்க முன்வரவில்லை. அதனால் 4 கோடியே 40 லட்சம் அமெரிக்க டொலர்களையே அரசாங்கத்தால் பெற்றுக்கொள்ள முடிந்தது. எனவே, செலுத்த வேண்டிய சர்வதேசக் கடனுக்காக இறக்கு மதிக்காக வைத்திருந்த பணத்தில் இந்த கடன்களை செலுத்த வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு அரசாங்கம் தள்ளப்பட்டது.

அதேபோல் ரூபாவின் விலை வீழ்ச்சி கண்டதன் காரணமாக 10 கோடி அமெரிக்க டொலர்களை செலுத்தி ரூபாவின் வீழ்ச்சியை கட்டுப்படுத்த வேண்டியதாகி விட்டது. மத்திய வங்கியால் 10 கோடி அமெரிக்க டொலர்களை சந்தைக்கு கொடுத்ததன் மூலமாகவே இப்போது ரூபாவின் விலை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பணமெல்லாம் நல்லாட்சி அரசாங்கத்தில் சேமிக்கப்பட்ட பணம் என்பதையும் மறந்துவிடக் கூடாது. இவ்வாறான பயணத்தை முன்னெடுத்து நாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்ல முடியாது. அரசாங்கத்துக்கு மிக நெருக்கடியான நிலைமையே இன்று காணப்படுகின்றது. ஆனால் அரசாங்கத்தில் உள்ள எவருக்கும் இந்த பிரச்சினைகள் விளங்கவில்லை.

சீனிக்கு வரி குறைப்பு செய்ததன் மூலமாக 100 கோடி ரூபா கொள்ளையடிக்கப்பட்டது. இந்த நாட்டிலுள்ள சகல மக்களுக்கும் கொரோனா தடுப்பூசி வழங்க 800 கோடி ரூபாவே தேவைப்படும் என அறிவிக்கப்பட்டது. ஆனால் வரி குறைப்பு மூலமாக அதனைவிட அதிகளவான தொகையை அரசாங்கம் கொள்ளையடித்துள்ளது.

இந்த அரசாங்கம் 2020 ஆம் ஆண்டில் 660 பில்லியன் ரூபா பணத்தை அச்சடித்துள்ளது. ஆனால் எமது ஆட்சிக்காலத்தில் நான்கு பில்லியன் ரூபாவை மாத்திரமே அச்சடித்தோம். இப்போது அரச வருமானம் 1,300 பில்லியன் ரூபாவாகும். இதில் முக்கால் வாசி புதிதாக அச்சடிக்கப்பட்ட பணமாகும். இதன் காரணமாகவே அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரித்துள்ளது. எனவே, அடுத்த இரண்டு ஆண்டுகளில் மிக மோசமான கடன் நெருக்கடியில் நாம் தள்ளப்படுவோம் எனவும் அவர் தெரிவித்தார்.

# மார்ச் மாதம் 31 முதல் ஒற்றை பயன்பாடு பொலித்தீனுக்கு தடை!

## வெளியானது வர்த்தமானி

ஒரு தடவை மற்றும் குறுகிய காலத்துக்கு பாவனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் பிளாஸ்டிக் பொருள்கள் எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதி முதல் தடை செய்யப்படவுள்ளன.

இந்த தடை தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) சுற்றுச் சூழல் அமைச்சால் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, 20 மில்லிமீற்றர் அல்லது 20 கிராம் நிறைக்கு குறைவான சிறிய பைகள், காற்றடைக்கப்படக் கூடிய விளையாட்டுப் பொருள்கள் தடை செய்யப்பட்டுள்ளன.

அத்தோடு பிளாஸ்டிக் காம்புகளுடனான கொட்டன் பட்ஸ் ஆகியனவும் குறித்த மார்ச் மாதம் 31 ஆம் திகதி முதல் இருந்து தடை செய்யப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

# ரத்மலான அஞ்சுவின் சகா போதைப்பொருளுடன் கைது!

பாதாள குழு உறுப்பினரான சிங்ஹாரகே அமல் சமிந்த தி சில்வா எனப்படும் 'ரத்மலான அஞ்சு' என்ற சந்தேக நபரின் சகா ஒருவர் கஞ்சா மற்றும் போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

மொறட்டுவ – லுனாவ பகுதியில் நேற்று பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

லுனாவ பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இவரிடமிருந்து 7 கிலோ 57 கிராம் கஞ்சா மற்றும் 5 போதை மாத்திரைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

# உறவுகள் கிடைக்கும் வரை சுதந்திரதினம் துக்க தினமே!

## காணாமற்போனோர் தெரிவிப்பு




எதிர்வரும் சுதந்திர தினத்தை கரிநாளாகவே நாம் கடைப்பிடிக்கவுள்ளோம் என வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் இலங்கையின் சுதந்திர தினநாளன்று, அடையாள உண்ணாவிரத போராட்டம் ஒன்றையும் முன்னெடுக்கவுள்ளனர் என அந்தச் சங்கத்தினர் குறிப்பிட்டுள்ளனர்

வவுனியாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக அவர்கள் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

எதிர்வரும் சுதந்திர தினத்தை கரிநாளாகவே நாம் கடைப்பிடிக்கவுள்ளோம்.

அன்றையதினம் அடையாள உணவுத்தவிர்ப்பு போராட்டங்கள், திருகோணமலை மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் முன்னெடுக்கப்படவுள்ளன.

அந்தவகையில் நான்காம் திகதி காலை 9 மணியிலிருந்து மாலை நான்கு மணி வரை வவுனியா பழைய பஸ் நிலையப் பகுதியில் அடையாள உணவுத் தவிர்ப்பு போராட்டத்தை நாம் முன்னெடுக்கவுள்ளோம்.

இந்தப் போராட்டத்துக்கு பொது அமைப்புகள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் மற்றும் தமிழ்த் தேசியத்திற்காக பாடுபடுகின்ற அனைவரும் ஒற்றுமையாக கலந்துகொண்டு, நீதிக்காக போராடிக்கொண்டிருக்கும் எமது போராட்டத்தை மேலும் வலுப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

எமது உறவுகள் கிடைக்கும் வரைக்கும் சுதந்திரதினத்தை துக்கதினமாகவே நாங்கள் கடைப்பிடிப்போம். – என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# அடையாள அட்டைகளை கொள்ளையிட்டு மோசடியில் ஈடுபட்ட சந்தேகநபர் சிக்கினார்!

அடையாள அட்டைகளை கொள்ளையடித்து அவற்றைப் பயன்படுத்தி பல வங்கிகளில் கணக்குகளை ஆரம்பித்தமை மாத்திரமின்றி, பண மோசடியிலும் ஈடுபட்ட சந்தேக நபரொருவரை கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித்ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

நவீன சங்கீத பொருள்கள் மற்றும் நவீன முறையிலான கணனி இயந்திரங்கள் என்பன குறைந்த விலையில் விற்பனை செய்யப்படும் என்று இணையத்தளத்தில் விளம்பரம் செய்து, பணமோசடியில் ஈடுபட்ட நபர் தொடர்பில் கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய குற்றப்புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை வெலிகம பகுதியில் வைத்து குறித்த மோசடியுடன் தொடர்புடைய நாத்தான்டியா பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரால் இணையத்தில் பதிவேற்றப்பட்ட விளம்பரம் தொடர்பில், எவரேனும் தொடர்பு கொண்டால் அவர்களுக்க அவசியமான பொருளை அனுப்பி வைப்பதற்காக முற்பணம் செலுத்துமாறு தெரிவித்துள்ளதுடன் அதற்காக தமது வங்கி கணக்கிற்கு அந்த பணத்தை வைப்பிலிடுமாறும் பின்னர் பொருளை அனுப்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பெருந்தொகையான பணத்தை கொள்ளையிட்டுள்ளமையுடன் இந்த மோசடிகளுக்காக பயன்படுத்திய வங்கி கணக்குகளும் பிற நபர்களின் அடையாள அட்டைகளை பயன்படுத்தியே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

அதற்கமைய குறித்த சந்தேகநபரை குற்றப் புலனாய்வு பிரிவினர் கைது செய்த போதும் அவரிடமிருந்து 6 அடையாள அட்டைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரின் மோசடிகளுக்கு முகங்கொடுத்துள்ளவர்கள் அது தொடர்பில் 071 - 8591753 என்ற இலக்கத்தை தொடர்புக் கொண்டு குற்றப்புலனாய்வு பிரிவின் பணிப்பாளரிடம் முறைப்பாடளிக்க முடியும். குற்றப்புலனாய்வு பிரிவினர் தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# எந்த அரச சொத்தும் விற்கப்பட மாட்டாது!

## சுசில் பிரேமஜயந்த உத்தரவாதம்



தற்போதைய அரசாங்கம் எந்தவொரு அரச சொத்தையும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்காது என இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கண்டியில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர், கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பான முடிவை எட்டுவதற்கு முன்னர் அனைத்து விடயமும் கருத்திற்கொள்ளப்படும் எனக் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் கொள்கை அறிக்கையில் குறிப்பிட்டதற்கு அமைவாகவே அரசாங்கம் செயற்படும் என்றும் இந்த விடயத்தில் அவர் பொருத்தமான முடிவை எட்டினர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கிழக்கு முனையத்தின் செயற்பாடுகள் தொடர்பாக பேச்சுகள் நடைபெற்று வருகின்றன எனவும், இறுதி முடிவை எட்டுவதற்கு முன்னர் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவை கூடி ஆராயும் என்றும் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டார்.



முருகபூபதி

# மல்லிகை ஜீவா விடைபெற்றார்!

## வரலாறாகிவிட்ட ஈழத்தின் இலக்கியக்குரல்!!

03

(நேற்றைய தொடர்ச்சி)

1972 இல் ஒரு நாள் நீர்கொழும்பு கடற்கரை மணலில் அமர்ந்திருந்த பொழுது மல்லிகை நீர்கொழும்பு சிறப்பிதழ் சிந்தனை தோன்றியதுபோன்றே, பல வருடங்களுக்குப் பின்னர் 1999இல் நீர்கொழும்பில் அதே சூரியவீதி இல்லத்தில் நண்பர் திக்குவல்லை கமாலுடனும் ஜீவாவுடனும் அமர்ந்து மதியவிருந்துண்டபோது உருவான சிந்தனைதான் மல்லிகையின் ஆஸ்திரேலியா சிறப்பு மலர்.

2001ஆம் ஆண்டு நாம் ஆஸ்திரேலியாவில் நடத்திய முதலாவது தமிழ் எழுத்தாளர் விழாவில் குறிப்பிட்ட மலர் வெளியிடப்பட்டது.

இம்மலரில், புவனா இராஜரட்ணம், நல்லைக்குமரன் குமாரசாமி, எஸ் சுந்தரதாஸ், பேராசிரியர் பொன்.பூலோகசிங்கம், பாலம்லக்ஷ்மணன், களுவாஞ்சிக்குடி யோகன், உரும்பைமகள், பிரவீணன் மகேந்திரராஜா, நடேசன், ஜெயசக்தி பத்மநாதன், தி.ஞானசேகரன், கலாநிதி வே. இ.பாக்கியநாதன், கவிஞர் அம்பி, மாவைநித்தியானந்தன், அருண். விஜயராணி, மாத்தளை சோமு, கனபரா யோகன், அ.சந்திரகாசன், பேராசிரியர் ஆ.சி கந்தராஜா, ரேணுகா தனஸ்கந்தா, த.கலாமணி, முருகபூபதி ஆகியோர் எழுதியிருந்தனர்.

மலரின் முகப்போவியத்தை அக்காலப்பகுதியில் சிட்னியிலிருந்த, தற்பொழுது யாழ்ப்பாணத்திலிருந்து ஜீவநதி மாத இதழை வெளியிடும் கலாமணி பரணீதரன் வரைந்திருந்தார். குறிப்பிட்ட ஆஸ்திரேலியா மலர் இலக்கியத்தரமாகவும் கனதியாகவும் வெளியாகியது.


நீர்கொழும்பு சிறப்பிதழையடுத்து திக்குவல்லை, அநுராதபுரம், முல்லைத்தீவு உட்பட பல பிரதேச சிறப்பிதழ்கள் வெளியாகின.

ஆனால் ஆஸ்திரேலியா மல்லிகை சிறப்பு மலருக்குப்பின்னர் எந்த ஒரு புகலிட நாட்டினதும் மல்லிகை சிறப்பு மலர் வெளிவரவேயில்லை என்பதுடன் மல்லிகையின் வரவும் கடந்த 2012 இறுதிக்குப் பின்னர் நின்றுவிட்டது என்பதும் காலத்தின் சோகம்.




1972 முதல் 2012 வரையிலான 40 ஆண்டு காலப்பகுதியில் ஜீவாவின் கனவுகள் சிலவற்றையாவது நனவாக்கியிருக்கின்றேன் என்ற மனநிறைவு எனக்குண்டு.

எனது கனவுகள் ஆயிரத்தை தமது




மல்லிகையில் பதிந்து படரவிட்டவருக்கு நன்றிக்கடனாக அவரது சில கனவுகளையாவது நனவாக்க துணை நின்றேன் என்ற உள்ளப்பூரிப்பு எனக்கு என்றும் உள்ளது.

அதில் முக்கியமானது இலங்கையில் நாம் பலர் இணைந்து 2011இல் நடத்திய முதலாவது சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு.

குறிப்பிட்ட மாநாட்டு யோசனையும் அவருடைய கொழும்பு மல்லிகை காரியாலயத்தில் எனக்கு அவரால் அளிக்கப்பட்ட ஒரு தேநீர் விருந்துபசாரச் சந்திப்பில் தான் உருவானது.

இயங்கிக்கொண்டிருப்பவர்களை முதுமையும் நோயும் அண்டாது என்பார்கள். அதற்கு ஒரு உதாரணமாக அவர் இயங்கினார்.

எல்லாம் போதும். போதுமப்பா - என்று என்னிடம் அடிக்கடி சொல்லியிருக்கிறார். அவர் ஓய்வை விரும்பிய கணங்கள் அவை. ஆனால் அவர் உறங்கும்பொழுது மட்டுமே ஓய்வெடுப்பவர்.

மல்லிகை வேலைகளை முடித்து, அலைந்து களைத்து வீடு திரும்பியதும் வாசலில் கால் செருப்புகளை கழற்றிவிட்டதுடன் அனைத்துக்கவலைகளையும் கழற்றிவிட்டுவிடும் இயல்புள்ளவர். இரவு உணவுக்குப்பின்னர் படுக்கையில் சாய்ந்தால் அவர் எந்தக்கவலையும் அற்று நித்திராதேவியுடன் சங்கமித்துவிடுவார்.

அதன் பின்னர் மறுநாள் காலைதான் கண்விழிப்பார்.

குண்டூசி விழுந்தாலும் அந்த ஓசையில் விழித்தெழும் எனக்கு, அவரது ஆழ்ந்த (இந்த விடயத்தில் அவர் கொடுத்து வைத்தவர்) உறக்கம் வியப்பானது. இனி அந்த உறக்கமே அவருக்கு நிரந்தரமானது. இனி மல்லிகை பற்றியும் சில குறிப்புகள்:-

மல்லிகை இலங்கை தமிழக எழுத்தாளர்கள் பலரது உருவப்படங்களையும் அட்டையில் பதிவுசெய்து அவர்களைப் பற்றிய ஆக்கங்களையும் பிரசுரித்து வந்தது. இதுவும் பெறுமதிமிக்க இலக்கியப்பணிதான்.

தமிழக படைப்பாளிகள் ஜெயகாந்தன், சிதம்பர ரகுநாதன், தி.க.சிவசங்கரன், வல்லிக்கண்ணன், நீலபத்மநாபன், பேராசிரியர் நா.வானமாமலை, பா.செயப்பிரகாசம், கவிஞர் அறிவுமதி, ஓவியர் மருது, சுதந்திர போராட்ட தியாகி சிந்துபூந்துறை அண்ணாச்சி சண்முகம் பிள்ளை, ஏ.ஏ.ஹெச். கே. கோரி மற்றும் வெளிநாடுகளில் வாழும் அ.முத்துலிங்கம் கவிஞர் அம்பி, வவுனியூர் இரா.உதயணன் பத்மநாப ஐயர், கவிஞர் சேரன், நிலக்கிளி பாலமனோகரன், க.பாலேந்திரா, எஸ்.பொ. வ.ஐ.ச.ஜெயபாலன் (நோர்வே) சுதாராஜ், இளைய அப்துல்லாஹ், முருகபூபதி ஆகியோரின் உருவப்படங்களையும் அவர்களைப் பற்றிய ஏனைய எழுத்தாளர்கள் எழுதிய ஆக்கங்களையும் மல்லிகை கடந்த காலங்களில் பிரசுரித்து அவர்களின் கலை, இலக்கிய, சமூகப் பணிகளைக் கௌரவித்திருக்கிறது.

அத்துடன் மல்லிகை ஜீவா என்ற இந்த ஈழத்து இலக்கியக்குரல் தமிழகத்துக்கு இலக்கியப் பாலமும் அமைத்தது.

குறிப்பிட்ட அட்டைப்படக் கட்டுரைகளும் பின்னர் தனித்தனி தொகுப்புகளாக மல்லிகைப்பந்தல் வெளியீடுகளாக நூலுருப்பெற்றன. அவை:-

அட்டைப்பட ஓவியங்கள் (1986)
மல்லிகை முகங்கள் (1996)
அட்டைப்படங்கள் (2002)
முன்முகங்கள் (2007)

பல்கலைக்கழகப் படங்களுக்காகவும் தேசியப் பட்டங்களுக்காகவும் பலரும் ஆலாய்ப் பறந்துகொண்டிருக்கும் காலகட்டத்தில் இலங்கையில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் 2001 ஆம் ஆண்டு முதுகலைமாணி பட்டம்வழங்கி கௌரவிக்க முனைந்து ஜீவாவுக்கு அழைப்பும் விடுத்தது.

ஜீவா என்ன செய்தார் தெரியுமா?

கல்வித்துறை சார்ந்த பட்டம் என்பதனால் அது தன்னை அவமானப்படுத்துவதற்காகவே வழங்கப்படுவதாகக் கருதி அதனை நிராகரித்தார். இவரது நிராகரிப்புத் தொடர்பாக பத்திரிகைகளில் காரசாரமான விவாதங்களும் எழுந்தன. பின்னர் குறிப்பிட்ட விவகாரமே ஒரு நூலையே வெளிவரச் செய்தது. பட்டம் மறுதலிப்பும் பல்வேறு சர்ச்சைகளும் என்ற தலைப்பில் கவிஞர் மேமன்கவி அந்தநூலைத் தொகுத்திருந்தார்.


பல்கலைக்கழக பட்டத்தை நிராகரித்த ஜீவா பிறிதொரு சந்தர்ப்பத்தில் இலங்கை அரசின் அதியுர் விருதான சாகித்திய ரத்னா, தேசத்தின் கண் ஆகியவற்றை பெற்றுக்கொண்டார். இவை இலக்கியம் சார்ந்திருந்தமையே அதற்குக்காரணம். அச்சந்தர்ப்பத்தில் இலங்கை ஜனாதிபதியிடம் தேசத்தின் கண் விருதினைப் பெற்றுக்கொண்ட மற்றுமொருவர் சர்வதேச புகழ்பெற்ற விஞ்ஞான எழுத்தாளர் ஆர்தர் சி. கிளார்க் ஆவார்.

கனடா இலக்கியத்தோட்டம் ஜீவாவுக்கு இயல்விருது வழங்கியபோது, நண்பர்பூரணி மகாலிங்கம் கொழும்பு வந்து தமிழ்ச் சங்க மண்டபத்தில் விழா நடத்தி அதனை அவரிடம் வழங்கினார். பலரது முகங்களை மல்லிகை முகப்பில் பதிவுசெய்த ஜீவாவை கனடா காலம் இதழ் அச்சமயம் முகப்பில் அலங்கரித்தது.

ஜீவாவின் சிறுகதைகள் ஆங்கில, சிங்கள மொழிகளிலும் பெயர்க்கப்பட்டுள்ளன. இவரது பல கதைகளின் சிங்கள மொழிபெயர்ப்பு பத்ரே பிரசூத்திய. (மொழிபெயர்த்தவர் இப்னு அஸுமத்)

ஜீவாவின் வாழ்க்கை வரலாற்று நூல் எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம். இதனை Undrawn Portrait for Unwritten Poetry என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ஆஸ்திரேலியாவில் வதியும் எழுத்தாளர் நல்லைக்குமரன் க.குமாரசாமி.

மல்லிகை இதழின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் பற்றி ஜீவா ஒரு நூல் எழுதியிருக்கிறார். அதன் பெயர்:- அச்சுத்தாளின் ஊடாக ஓர் அனுபவப் பயணம்.




இலக்கிய சிற்றேடுகள் வெளியிட துணிபவர்களுக்கு இந்நூல் சிறந்த பாடநூல்.

இலங்கையிலும் தமிழகத்திலும் இலக்கியச்சிற்றேடுகள் வெளியிட்டு சிரமப்பட்டு பின்வாங்கிக் கொண்டவர்களைப் பற்றியும் ஜீவா, மல்லிகையின் 44 ஆவது ஆண்டு மலரில் நினைவூட்டியிருக்கிறார்.

ரகுநாதன் (சாந்தி), சி.சு.செல்லப்பா (எழுத்து), நா.பார்த்தசாரதி (தீபம்), ஜெயகாந்தன் (ஞானரதம்), கோமல் சுவாமிநாதன் (சுபமங்களா), வல்லிக்கண்ணன், விந்தன் ஆகியோரே ஜீவா நினைவூட்டுபவர்கள்.

இவர்களுடன் கவிஞர் கண்ணதாஸனையும் வேறும் சிலரையும் ஜீவா தற்செயலாக மறந்துவிட்டார்.

இலங்கையில் கே.கணேஷ் (பாரதி), செ.கணேசலிங்கன் (குமரன்), ரஹ்மான் (இளம்பிறை), வரதர் (வெள்ளி - புதினம்)

இவர்களில் கணேசலிங்கன், ரஹ்மான், வரதர் ஆகியோர் சொந்தமாக அச்சுக்கூடமே வைத்திருந்தவர்கள். இலங்கையில் மெய்கண்டான் கலண்டர்களை வருடந்தோறும் வெளியிடும் பிரபல அச்சகத்தினரும் நீர்கொழும்பில் சாந்தி அச்சகத்தினரும் இலக்கியச் சஞ்சிகைகளை நடத்திக் கைவிட்டவர்களே.

(10ஆம் பக்கம் பார்க்க)

# மெய்நிகர் வகுப்பறை

05

## Online Classroom




**ஜனனி தேவானந்த்**
(முதுநிலை விரிவுரையாளர் -
(தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

மெய்நிகர் வகுப்பறையை உருவாக்குவதற்கு இணையத்தில் கிடைக்கக்கூடிய மென்பொருள்கள் பற்றிக் கடந்த தொடரில் பார்த்தோம் அவற்றை விரிவாக நோக்கலாம்....

**மைக்ரோசொப்ற் ரீம்ஸ்**

மைக்ரோசொப்ற் ரீம்ஸ் இணையத்தில் கிடைக்கப் பெறுகின்ற ஒரு மென்பொருளாகும். இது மைக்ரோசொப்ற் ஒபிஸ் உள்ள ஒரு கூட்டு பணியிடமாகும், இது பணியிட உரையாடல்கள், கூட்டு குழுப்பணி, வீடியோ அரட்டைகள் மற்றும் ஆவணப் பகிர்வு ஆகியவற்றுக்கான வசதிகளோடு செயற்படுகிறது, இவை உண்மையில் பெரு நிறுவனங்களின் வேலைப்படை மற்றும் ஆளணியினரின் திறன்மேம்பாட்டுக்கும் முகாமைத்துவத்துக்கும் உதவும் நோக்கம் கருதி உருவாக்கப்பட்டது. ஓர் ஒருங்கிணைந்த தொகுப்புக் கருவிகளின் மூலம் தொழிலாளர் உற்பத்தித்திறனுக்கு உதவ வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த மென்பொருள் 2017 இல் மைக்ரோசொப்ற் நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்டது. கொவிட் - 19 தொற்றுநோய் மோசமடைந்து வந்த காலகட்டத்தில் மிகவேகமாக அதன் பயனர்கள் அதிகரித்துச் செல்கிறார்கள். மைக்ரோசொப்ற் ரீம்ஸ் நிறுவனம் தனது வரலாற்றில் வேகமாக வளர்ந்து வரும் வணிக பயன்பாட்டு நிறுவனமாக இனம் காணப்படுகிறது. இப்போது கல்வித்துறையிலும் இது வேகமாகப் பயன்படுத்தப்படுகின்றது. இதனால் ஒரு நட்சத்திர தயாரிப்பாக இனங்காணப்படுகிறது. இதனை 'திறந்த அலுவலக இடத்தின் டிஜிற்றல் மொழிபெயர்ப்பு' என்று குறிப்பிடுகிறார்கள்.


இணைய உலாவி வழியாகவும், மொபைல் பயன்பாடாகவும் இது கிடைக்கின்றது. இது விண்டோஸ், மேகோஸ், **IOS** மற்றும் **Android** போன்ற அனைத்து முக்கிய இயக்க முறைமைகளிலும் ஆதரிக்கப்படுகிறது.

'தொடர்ச்சியான அரட்டை, கோப்புகள் மற்றும் வீடியோ கான்ஃபெரன்சிங் ஆகியவற்றை ஒன்றிணைக்கும் ஓர் ஒருங்கிணைந்த மையமாக மைக்ரோசொப்ற் ரீம்ஸ் காணப்படுகின்றது எனலாம். இதில் இரண்டு முக்கிய வகை சனல்கள் உள்ளன:

1. தனியார் சனல்கள், இது இரகசிய உரையாடல்களுக்கு மிகவும் பொருத்தமானவை, அவை சட்ட அல்லது நிதிக் குழுக்களுக்கு மிகவும் பயனுள்ளவையாக இருக்கும், அதே சமயம் -

2. 'நிலையான' சனல்கள். பணியிடத்தில் உள்ள எவரும் எழுதப்பட்டவற்றைக் காணவும் பகிரப்பட்ட கோப்புகளை அணுகவும் அனுமதிக்கின்றன.

ஒரு டெஸ்க்டாப் பயன்பாட்டின் பக்கப் பட்டியில் பயனர்கள் அடிக்கடி தொடர்பு கொள்ளும் குழுக்களின் கூறுகளுக்கு குறுக்குவழிகள் உள்ளன. அரட்டை, அழைப்புகள், அணிகள் மற்றும் கோப்புகள், பயன்பாடுகள், குறிப்புகள், பதில்கள் மற்றும் பிற அறிவிப்புகளுக்கான செயற்பாட்டு செய்தி ஊட்டத்துடன் இவை அமர்ந்துள்ளன. மைக்ரோசொப்ற் ரீம்ஸ் பயன்பாட்டுக்குக் கிடைக்க ஒரு குறுக்குவழி உள்ளது, அங்கு அங்கீகரிக்கப்பட்ட மைக்ரோசொப்ற் மற்றும் மூன்றாம் தரப்பு மென்பொருள்களை விரைவாக அணுகுவதற்காக பக்கப்பட்டியில் சேர்க்கலாம்.



டெஸ்க்டாப் பயன்பாட்டின் இடதுபுறத்தில் ஒரு பக்கப் பட்டி பயனர்கள் அடிக்கடி தொடர்பு கொள்ளும் குழுக்களின் கூறுகளுக்கு குறுக்குவழிகளைக் கொண்டுள்ளன. அரட்டை, அழைப்புகள், அணிகள் மற்றும் கோப்புகள் பயன்பாடுகள் குறிப்புகள், பதில்கள் மற்றும் பிற அறிவிப்புகளுக்கான செயற்பாட்டு செய்தி ஊட்டத்துடன் அமர்ந்துள்ளன. மைக்ரோசொப்ற் ரீம்ஸ் பயன்பாட்டுக் கிடைக்கு ஒரு குறுக்குவழியும் இதில் உள்ளது, அங்கு அங்கீகரிக்கப்பட்ட மைக்ரோசொப்ற் மற்றும் மூன்றாம் தரப்பு மென்பொருள்களை விரைவாக அணுகுவதற்காக பக்கப்பட்டியில் சேர்க்கலாம்.

**மைக்ரோசொப்ற் ரீம்ஸ் எவ்வாறு பயன்படுத்துவது**

மைக்ரோசொப்ற் பயனர்கள் வேர்ட், எக்செல், பவர்பொயிண்ட் மற்றும் பிற கோப்பு வகைகளை நிகழ்நேரத்தில் இணைக்கலாம். 'கோப்புகள்' பிரிவில் உள்ள ஆவணங்கள் கோப்புகளைச் சேமித்து அணுகும் திறனுடன் **OneDrive** இல் சேமிக்கப்படுகின்றன.

அவுட்லுக் காலெண்டர்களுடன் அணிகள் ஒத்திசைக்கின்றன, அட்டவணைகளுக்குத் தயாராக அணுகலை வழங்கவும் கூட்டங்களை அமைக்கவும். நிறுவன சமூக வலைப்பின்னல் பயன்பாட்டுடன் ஆழமான ஒருங்கிணைப்பும் உள்ளது, குழுக்களுக்கான சமூகங்கள் பயன்பாட்டுக்கு நன்றி, மற்றும் குழுக்களுக்குள் பவர்பொயிண்ட் உள்ளடக்கத்துக்கான அணுகல் போன்ற வசதிகள் உள்ளன.

2021 ஆண்டு, மைக்ரோசொப்ற் குழுக்களுக்குள் பயன்படுத்த வடிவமைக்கப்பட்ட புதிய பயன்பாடுகளையும் அறிமுகப்படுத்தியுள்ளது. இதில், தரவுத்தளம் மற்றும் விரிதாள் அம்சங்களை ஒருங்கிணைத்து நிகழ்வுகளைத் திட்டமிடுவதற்கும், ஆட்சேர்ப்பைக் கண்காணிப்பதற்கும் அல்லது புதிய பணியாளர்களுக்கு உதவுவதற்கும் தகவல்களை நிர்வகிக்கிறது.

மைக்ரோசொப்ற் ரீம்ஸ் அலுவலக அடிப்படையிலான தொழிலாளர்களுக்கு மட்டுமல்ல. கள தொழில்நுட்ப வல்லுநர்கள், சில்லறை ஊழியர்கள் மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள் போன்ற 'முதல் -வரிசை தொழிலாளர்கள்' என்று அழைக்கப்படுபவர்களுக்கும் உதவும் மென்பொருளாக உள்ளது.

ஒரு மேசையில் உட்கார்ந்துகொள்வதை விட மொபைல் சாதனத்தை நம்பியிருக்கும் தொழிலாளர்களுக்குப் பலவிதமான திறன்கள் இதில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் ரிப்ட்ஸ், தொழிலாளர் மாற்றங்களை நிர்வகிப்பதற்கான ஓர் அட்டவணை மேலாண்மை பயன்பாடு மற்றும் வாட்ஸ் அப்பிற்கு ஒத்த எளிய செய்தியிடல் பயன்பாட்டை வழங்கும் வசதிகளும் மைக்ரோ சொப்ற் ரீம்ஸ் உள்ளன.

மைக்ரோசொப்ற் ரீம்ஸ் உள்ள வீடியோ மற்றும் ஆடியோ கான்பரன்சிங் என்பது கற்றலில் முக்கியமான பகுதியாகும், கொவிட் 19 தொற்றுக் காலகட்டத்தில் மார்ச் மாதத்தில் வீடியோக் கூட்டங்களில் இதன் பயன்பாடு 100 மடங்கு அதிகரித்துள்ளதாக மைக்ரோசொப்ற் நிறுவனம் அறிவித்துள்ளது, மார்ச் மாத ஆரம்பத்தில் 32 மில்லியனிலிருந்து ஏப்ரல் இறுதிக்குள் 75 மில்லியனாக இது உயர்ந்துள்ளது.

வணிக உலகைப் பொறுத்தமட்டில் இன்று ரீம்ஸ் வீட்டிலிருந்து வேலையை செயல்படுத்துகிறது, 'வீடியோ கான்ஃபெரன்சிங், ஸ்கிரீன் பகிர்வு மற்றும் எளிதாக ஒத்துழைத்தல் மற்றும் கோப்புகளில் இணைந்து பணியாற்றுவது போன்ற அம்சங்கள் வணிகங்களுக்கும் ஊழியர்களுக்கும் பல வழிகளில் தொற்றுநோய்க்கு முந்தையதை விட அதிக உற்பத்தித் திறன் கொண்டவையாக இருக்க உதவுகின்றன.

மைக்ரோசொப்ற் ரீம்ஸ் கவனச்சிதறல்களைக் குறைக்க உதவ, நிகழ்நேர சத்தம் ஒடுக்கம் இதில் சேர்க்கப்பட்டுள்ளது. தேவையற்ற பின்னணி இரைச்சலை வடிகட்டவும், பேச்சு சமிக்ஞையை மட்டுமே தக்கவைக்கவும் இது உதவுகிறது. அதேவேளை, தனிப்பயன் பின்னணிகள், திரை பகிர்வு, கை உயர்த்துவது, பதிவு செய்தல் மற்றும் நேரடி தலைப்புகள் போன்ற அடிப்படை வீடியோ அழைப்பு அம்சங்களும் இதில் உள்ளன. இதிலுள்ள மேலுமொரு சிறப்பம்சமாக 'பிரேக்அவுட் அறைகள்' வசதி குறிப்பிடப்படுகின்றது.

குழு வீடியோ அழைப்புகளைத் தவிர, வாடிக்கையாளர்கள் நிறுவன அளவிலான ஒளிபரப்புகளுக்கு 10 ஆயிரம் ஊழியர்களுக்கு நேரடி ஸ்ட்ரீமிங் வீடியோவைப் பயன்படுத்த வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, ஒரு விடயத்தைக் கவனத்தில் கொள்ளவேண்டும், அதாவது மைக்ரோசொப்றின் முக்கிய கவனம் அதன் சொந்த பயன்பாடுகளுடன் ஒருங்கிணைப்பதில் உள்ளது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இது ஆச்சரியப்படுவதற்கில்லை,

தனிப்பட்ட பயன்பாடுகள், தாவல்கள், இணைப்பிகள் மற்றும் செய்தி அனுப்புதல் போன்ற வசதிகள், இவை வெவ்வேறு வழிகளில் பயன்படுத்தப்பட்டுத் தொடர்பு கொள்ளப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, 'தாவல்கள்' பயன்பாடுகள் சனல்களில் நிறுவப்பட்டுள்ளன, அதே நேரத்தில் இணைப்பிகள் வெளிப்புற சேவையிலிருந்து தகவல்களை சனலில் இடுகின்றன.

மைக்ரோசொப்ற் ரீம்ஸ் மென்பொருள் தானாக கணிணி திறக்கும் போது தானும் திறந்து கொள்ளும். இது எல்லாவற்றிலும் தான் தான் என முந்திரிகொட்டை போல முன்னுக்கு நிற்பவரின் தொல்லைக்கு ஒப்பானது. ஆனால், மைக்ரோசொப்ற் ரீமில் இத்தொல்லையை தவிர்க்கமுடியும். அதனை முடக்கி வைக்க முடியும். அநேகர், தங்கள் கணிணியை இயக்கும்போது தானாகவே மைக்ரோசொப்ற் ரீம்ஸ் தொடங்குவதை விரும்புவதில்லை. உங்கள் முதலெழுத்துக்களுடன் மேல் வலது மூலையில் உள்ள ஐக்கனைக் கிளிக் செய்து, அமைப்புகளுக்குச் செல்லவும். பொது அமைப்புகள் பிரிவின் கீழ் 'ஆட்டோ - ஸ்டார்ட் அப்ளிகேன்', 'பயன்பாட்டை பின்னணியில் திற', மற்றும் 'நெருக்கமாக, பயன்பாட்டை தொடர்ந்து வைத்திருங்கள்' என்பதற்கு அடுத்த டிக்கை அகற்றவும். இந்தத் தொல்லை இல்லாது போய்விடும்.

(தொடரும்...)

# துறைமுகத்தின் கிழக்கு முனைய விவகாரம்: தேரர்களின் கருத்தை அரசு ஏற்கவேண்டும்!



## ஞானசார தேரர் வலியுறுத்தல்

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய விவகாரத்தில் பௌத்த மதத் தலைவர்கள் ஒருமித்து தமது நிலைப் பாட்டை அறிவிக்க வேண்டும். தனி சிங் கள தலைவர் தலைமையிலான அரசாங் கத்தை தோற்றுவிக்க பௌத்த தேரர்கள் முன்னின்று செயற்பட்டுள்ளார்கள். எனவே, அரசாங்கம் பௌத்த தேரர்க ளின் கருத்துக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்றும் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞான சார தேரர் தெரிவித்தார்.

பொதுபல சேனா அமைப்பின் காரி யாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

தேசிய வளங்களைப் பாதுகாப்போம், பிற நாட்டவர்களுக்கு அவற்றைத் தாரை வார்க்க மாட்டோம் என்பது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரதான தேர் தல் பிரசாரமாக தேர்தல் காலங்களில் காணப்பட்டது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த விடயங்களை தனது கொள்கைத்திட்டத்தில் வெளியிட்டார். கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய விவகாரம் 2020 ஆம் ஆண் டுக்கு பிறகு பேசப்படும் விடயமல்ல. முன் னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க காலத்தில் இருந்து இந்த விடயம் பேசப்படுகிறது.

கிழக்கு முனைய விவகாரம் தற்போது அரசியல் மற்றும் சமூக மட்டத்தில் பிர தான பேசுப்பொருளாகக் காணப்படுகி றது. இந்த விடயத்தைக் கொண்டு அர சாங்கத்துக்குள் பல அரசாங்கங்கள் தோற்றம் பெற்றுள்ளன. அமைச்சர்கள் தங்களின் தனிப்பட்ட கருத்துக்களை அர சாங்கத்தின் கருத்தாக ஊடகங்களில் தெரி விக்கிறார்கள். இந்த விடயம் அரசாங்கம் தொடர்பில் தவறான நிலைப்பாட்டை மக் கள் மத்தியில் ஏற்படுத்தும்.

பௌத்த மதத் தலைவர்கள் தங்களின் நிலைப்பாட்டை அரசாங்கத்துக்கு ஒரு மித்து அறிவிக்க வேண்டும். பீட அடிப் படையில் பௌத்த தேரர்களிடம் வேறு பட்ட நிலைப்பாடு காணப்படலாம். ஆனால், நாடு என்ற ரீதியில் ஒருமித்த கொள்கை காணப்படுகிறது. தனி சிங்களத் தலைவர் தலைமையிலான அரசாங்கத்தை தோற் றுவிக்க பௌத்த தேரர்கள் முன்னின்று செயற்பட்டுள்ளார்கள். ஆகவே, அரசாங் கம் பௌத்த தேரர்களின் கருத்துக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

கிழக்கு முனைய விவகாரம் தொடர் பில் அரசியல்வாதிகள் தங்களின் தனிப் பட்ட கருத்தைத் தெரிவிப்பதை முதலில் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி நாட்டு மக் களுடன் கலந்துரையாட வேண்டும். இதற்கான நடவடிக்கைகளை மகா நாயக்க தேரர்களுடாக முன்னெடுத் துள்ளோம். – என்றார்.

# முல்லை குருந்தூர்மலை விவகாரம்: முக்கிய கலந்துரையாடல் இன்று!

முல்லைத்தீவு குருந்தூர் மலை மற்றும் படலைக்கல்லு (கல்யாணி புர) ஆகிய பகுதிகளில் தொல்பொருள் ஆராய்ச்சிகள் முன்னெடுப்பதற் கான பூர்வாங்க செயற்பாடுகள் நிறை வடைந்தமையைத் தொடர்ந்து அங்கு தமிழ் மக்களின் பூர்விக அடையாளங்கள் அழிக்கப்பட்டன என சர்ச்சைகள் ஏற்பட்டுள்ளன.

அத்துடன் தொல்லியல் அகழ்வா ராய்ச்சி என்ற பெயரில் விகாரை அமைக்கும் செயற்பாடுகள் முன் னெடுக்கும் அபாயமுள்ளதாக சந்தே கங்களும் வெளியிடப்பட்டுள்ளன. இந்நிலையில் தொல்லியல் அகழ் வாராய்ச்சிகளின் போது யாழ்.பல் கலைக்கழகத்தைச் சேர்ந்த துறை சார்ந்தவர்களையும் இணைத்துக் கொள்ளுமாறு தமிழ் அரசியல், சிவில் பிரதிநிதிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் இன்று திங்கட்கி ழமை, இராஜங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தலைமையில் தொல்லியல் துறை அதிகாரிகள் கலந்துகொள்ளும் முக்கிய கலந்து ரையாடலொன்று நடைபெறவுள் ளது. இந்தக் கலந்துரையாடலில் தமிழ் தரப்பு துறைசார்ந்தவர்களை குருந்தூர் மலை அகழ்வாராய்ச்சி களின் போது, ஈடுபடுத்துகின்றமை தொடர்பில் தீர்மானிக்கப்படவுள்ள தாகத் தெரியவருகின்றது.

# ஏக்கலையில் விபத்து மூவர் பரிதாப சாவு!

கொழும்பு – மினுவாங்கொட பிரதான வீதியின் ஏக்கல பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

வான் ஒன்று வேகக் கட்டுப்பாட்டினை இழந்து வீதியை விட்டு விலகி அருகிலிருந்து சுவருடன் மோதுண்டே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் 48, 49 மற்றும் 64 வயதுடைய மூவரே உயிரிழந்துள்ளனர் என ஆரம்பக் கட்டத் தகவல்க ளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

# யாழ். நகரப் பகுதியில் விசேட சுற்றிவளைப்பு!



யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் பொலிஸாரால் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக் கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் – 19 பரவலைக் கட்டுப்படுத்துவதற்காகவும், போதைப்பொருள் நடவ டிக்கைகளில் ஈடுபடுபவர்களைக் கைது செய்வ தற்காகவும் நாட்டின் பல பாகங்களிலும் உள்ள பிர தான நகரங்களில் பொலிஸாரின் விசேட சுற்றிவ ளைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின் றன.

இதன்படி, சனிக்கிழமை யாழ்ப்பாண நகரில் யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெர் னாண்டோ தலைமையில் இந்த விசேட சுற்றி வளைப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றன.

# குருந்தூர் மலையை படையினருடன் பார்வையிடச் சென்ற பிக்குகள் குழு!



முல்லைத்தீவு மாவட்டத்தில் அகழ்வு ஆராய்ச்சி பணிகள் முன்னெடுக்கப்படும் குருந்தூர் மலைக்கு பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர் உள்ளிட்ட பௌத்த மதகுருமார்கள் படை அதிகாரிகளுடன் கடந்த சனிக்கிழமை மாலை சென்று பார்வையிட்டுள்ளனர்.

அந்த மலையின் அடிபாரத்தில் பொலிஸார் மற்றும் படையினர் கடமைகளில் நின்றபோதும் எந்த வித தடை யும் இன்றி தேரர்கள் மலைக்கு செல்ல அனுமதிக்கப்பட் டுள்ளனர்.

அதேவேளை, அங்கு செய்தி சேகரிக்கச் சென்ற ஊடக வியலாளர்களுக்கான அனுமதி பொலிஸாரால் மறுக்கப் பட்டுள்ளதுடன் ஊடகவியலாளர்களின் பெயர் விவரங்க ளும் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

குருந்தூர் மலையைப் பார்வையிடச்சென்ற தேரர்க ளைப் படம் எடுக்க வேண்டாம் என்று அங்கு கடமையில் நின்ற பொலிஸாரால் ஊடகவியலாளர்களுக்கு அறிவு றுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், இவ்வாறு குருந்தூர் மலையை பார் வையிடச் சென்ற பௌத்த துறவிகள் குழு குருந்தூர் மலைக்கு அருகில் உள்ள குருந்தூர் குளத்தையும் பார்வையிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் 8 கிலோ கஞ்சாவுடன் பெண் ஒருவர் கைதாகினார்!



யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணம், அச்சு வேலி பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் 8 கிலோ கஞ்சாவு டன் கைது செய்யப்பட்டுள்ளார்.

48 வயதுடைய குறித்த பெண், நீண்ட காலமாக கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தார் எனவும் அவருடைய கண வர் பிரதேச சபை ஒன்றில் சாரதியாக செயற்பட்டு வருகிறார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து குறித்த வீட்டைச் சோதனையிட்டபோது வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கஞ்சா கைப்பற்றப் பட்டுள்ளது.

கஞ்சாவுடன் கைதுசெய்யப்பட்ட பெண் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

## மிளகாய் அறுவடையும் சந்தைப்படுத்தலும்

பச்சை மிளகாயாக பறிப்பதாயின் நன்றாக முற்றி இருத்தல் முக்கியமாகும். இளம் பச்சை மிளகாய் காரத்திலும், பாரத்திலும் குறைவாகும் விரைவில் தரம் குறைந்து போவதால் நன்றாக முற்றிய மிள காய்களையே அறுவடை செய்ய வேண்டும்.

அறுவடை செய்த பழங்களை 2 நாள்கள் வரை குவித்து வைத்திருந்து 3ஆம் நாள் தொடக்கம் உலர்த்தத் தொடங்க வேண்டும். 5 நாள்களிலிற்கு வெயிலில் உலர வைத்தால் போதுமானதாகும். மிளகாயை உலர விடும் பொது பாய், சாக்கு, ஈராபோலின் போன்றவற்றின் மீது இடுவது சிறந்ததாகும். ஏனெனில் செத்தல் மிளகாய் பளப்பான தன்மைக்கும். அதன் சிவப்பு நிறத்திற்கும் ஏற்படும் பாதிப்புக்களை குறைத்துக் கொள்ள முடியும். இவ்வாறு நன்கு உலர்ந்த செத்தல் மிளகாயை சாக்குகளில் இட்டு சேமித்து வைக்க வேண்டும். செத்தல் மிளகாயை நீண்ட காலம் களஞ்சியப்படுத்தி வைத்திருப்பதற்கு அடிக்கடி வெயிலில் உலர்த்துவது அவசியமாகும்.

நன்கு உலர்த்தி பெறப்பட்ட செத்தல் மிளகாயை 4 – 6 மாதங்கள் வரை களஞ்சியப்படுத்தி வைத் திருக்கலாம். சாதாரணமாக ஒரு ஏக்கரில் மிளகாயை பயிரிடுவதற்காக சுமார் 80,000வரை செல வாகும்.

ஆனால் ரூபா 1,50,000.00இற்கும் அதிகமான இலாபத்தைப் பெறலாம். இதனைத் திவிர பச்சை மிளகாயாக வெளிநாடுகளிற்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் வருமானத்தை மேலும் அதிகரித்துக்கொள்ள முடியும்.

ர.ரஜீவன் – விவசாய பட்டதாரி

# ஜெனிவாவில் இலங்கையை பாதுகாக்க சீனா பிரயத்தனம்

## உள்ளக விடயங்களில் வெளிநாடுகள் தலையிடவே கூடாது; சீனத் தூதரகத்தின் அரசியல் பிரிவுத் தலைவர் வலியுறுத்து

கொழும்பு, ஜனவரி 31

சர்வதேச அரங்கில் உள்ள எந்தவொரு நாட்டினதும் உள்ளக விடயங்களில் பிற நாடுகள் தலையீடு செய்வதற்கு இடமளிக்க முடியாது என்பதே மக்கள் சீனக் குடியரசின் நிலைப்பாடாகும். இதனை அடியொற்றியதாகவே ஜெனிவாவிலும் எமது முடிவும் செயற்பாடும் இருக்கும்.

– இவ்வாறு இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் அரசியல் பிரிவுத் தலைவரும் ஊடகப் பேச்சாளருமான லு சொங் தெரிவித்தார்.

அந்தவகையில் மனித உரிமைகள் சார்ந்த விடயங்கள், இன முரண்பாடுகளுக்கான தீர்வுகள் என்பவை இலங்கையின் உள்ளக விடயங்களாகும். இதில் மக்கள் சீனக் குடியரசு ஒருபோதும் தலையீடு செய்யாது. ஏனைய நாடுகள் தலையீடு செய்வதையும் விரும்பாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் மனித உரிமைகள் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளன எனவும், அதடினப்படையில் சில நிகழ்ச்சி நிரல்கள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் மார்ச் மாதக் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ள ஆணையாளர் மிச்செல் பச்லெட்டின் இலங்கை குறித்த மீளாய்வு அறிக்கையில், இலங்கை அபாயரகமான பாதையில் பயணிக்கின் றது எனவும், அதே நேரம், ஏற்கனவே நடைபெற்ற விடயங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலைச் செய்வதற்குச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்பதுள்ளிட்ட பல விடயங்களைக் குறிப்பட்ட காட்டமான உள்ளடக்கங்கள் காணப்படுகின்றன. இதுபற்றிய மக்கள் சீனக் குடியரசின் நிலைப்பாடு என்னவாக உள்ளது என்றும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர் பில் இணை அனுசரணை நாடுகளால் புதிய பிரே ரணை கொண்டுவரப்படவுள்ள நிலையில் அதன் மீதான வாக்கெடுப்பில் மக்கள் சீனக் குடியரசு எவ்விதமான பிரதிபலிப்பைக் காட்டப்போகின்றது என்றும் வினவியபோதே இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் அரசியல் பிரிவுத் தலைவருமான ஊடகப் பேச்சாளருமான லு சொங் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நீங்கள் எழுப்பிய இரண்டு வினாக்கள் தொடர்பில் எமது நிலைப்பாடு மிகவும் தெளிவாக உள்ளது. முதலாவதாக, மனித உரிமைகள், இன முரண்பாடுகளுக்கான தீர்வுகள் தொடர்பான விடயங்கள் இலங்கையின் உள்ளக விடயமாகும். இலங்கை இறைமை உள்ள நாடு என்ற வகையில் இந்த விடயத்தில் பிற தரப்புக்கள் தலையிடுகின்றமை பொருத்தமற்றதாகும்.

எம்மைப் பொறுத்தவரையில் மக்கள் சீனக் குடியரசின் உள்ளக விடயங்களில் பிறநாடுகள் தலையீடுகளைச் செய்வதை விரும்புவதில்லை. அதற்கு இடமளிப்பதும் இல்லை. அதுபோன்றே உலகில் உள்ள எந்தவொரு நாட்டினதும் உள்ளக விடயங்களில் பிற நாடுகளோ அல்லது சக்திகளோ தலையீடு செய்வதற்கு இடமளிக்கமுடியாது. இதனை அடியொற்றியதாகவே ஜெனிவாவிலும் எமது நிலைப்பாடு அமையும்.

அடுத்ததாக, மனித உரிமைகள் விடயமானது இறைமையுள்ள ஒவ்வொரு நாடுகளாலும் பின்பற்றப்படும் விடயமாகும். இந்த விடயம் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு அரசியல் மயப்படுத்தப்பட்ட மனித உரிமைகள் விடயத்தை நாடொன்றுக்கு எதிராக ஆயுதமாகப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்க முடியாது.

இதேவேளை, இலங்கை விவகாரம், ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக்கு அனுப்பப்பட்டு செயலாளர் நாயகத்தின் பரிந் துரையில் ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு அனுப்புவதற்காக அனுப்பப்படுகின்ற போது, சீனா தனது வீட்டோவைப் பயன் படுத்துமா என்று வினா எழுப்பியபோது, அவ்வாறான நிலைமை ஏற்படும் என்று தெரியவில்லை. இருப்பினும் நான் மேற்குறிப்பிட்ட நிலைப்பாடே இந்த வினாவுக்கும் பொருந்தும் என்றும் தெரிவித்தார்.

# மல்லிகை ஜீவா.......

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவற்றிலிருந்து புலனாவது. அச்சகம் இருந்தால் மாத்திரம் ஒரு சிற்றிதழை நடத்திவிடலாம் என்பது அல்ல.

இங்குதான் மல்லிகை ஜீவாவின் அசுர பலம் புலனாகியது.

ஒரு காலத்தில் மல்லிகையை 'சிறுசோறு படைக்கும் சஞ்சிகை' என்று கிண்டலாக விமர்சித்த பிரபல எழுத்தாளர் எஸ்.பொ.வின் உருவப்படத்தையும் மல்லிகை பிரசுரித்து கௌரவித்திருக்கிறது. எஸ்.பொ.வுக்கு 75 வயது (பவளவிழா) எனத்தெரிந்ததும் வாழ்த்துத்தெரிவித்து கட்டுரையும் பிரசுரித்தது. காலம்காலமாக மல்லிகையுடனும் ஜீவாவுடனும் முரண்பட்டவர்கள் கூட மல்லிகையின் அட்டைப்படங்களிலும் உள்ளடக்கத்திலும் இடம்பெற்றுள்ளனர்.

இந்தப்பண்பு இலங்கை இலக்கிய உலகத்திற்கு மட்டுமல்ல தமிழகத்து இலக்கியவாதிகளுக்கும் முன்னுதாரணமாகும்.

இச்சந்தர்ப்பத்தில் ஒரு தகவல்:-

கோமல் சுவாமிநாதனின் சுபமங்களாவில் ஜெயகாந்தனின் நேர்காணல் வெளிவரவே இல்லை. அதற்கான முயற்சியை பரீக்ஷா ஞாநி மேற்கொண்டபோதும் கோமல் அதற்கு உடன்படவில்லை.

தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் இலக்கியவாதிகள் இயங்கவேண்டும் என்பதற்கும் மல்லிகை ஜீவா முன்னுதாரணமாகியிருந்தார்.

யாழ்ப்பாணத்தில் காங்கேசன்துறை வீதியில் ஒரு ஒழுங்கைக்குள்தான் முன்னர் மல்லிகை அலுவலகம் இயங்கியது. ஒருசமயம் இலங்கை இராணுவத்தின் எறிகணைத்தாக்குதலுக்கும் இலக்கானது. மல்லிகை சாதனங்கள் சேதமுற்றன. ஜீவாவும் அவருடன் அங்கே அச்சுக் கோப்பாளராக பணியாற்றிய சந்திரசேகரமும் உயிர்தப்பியது ஈழத்து இலக்கியம் செய்த புண்ணியமோ தெரியவில்லை.

1995 இற்குப் பின்னர் மல்லிகை ஜீவா கொழும்பு வாசியாகிறார். ஆனால் இந்த இடப்பெயர்வு அவராக விரும்பி ஏற்றுக்கொண்டதல்ல. மல்லிகைக்காகவே இடம்பெயர்ந்தார். தொடர்ந்தும் இயங்கினார். மல்லிகையும் மலர்ந்தது.

2012இற்குப் பின்னர் மல்லிகையின் வரவு தடைப்பட்டுவிட்டது. தினக்குரல் ஞாயிறு இதழில் மல்லிகை ஜீவா பற்றிய தொடரை எழுதியவரும் ஜீவாவின் உற்ற நண்பருமான தெணியானும் மல்லிகை 50ஆவது ஆண்டு மலர் வரையிலாவது வரவேண்டும் என்று என்னுடன் தொலைபேசியில் உரையாடும் சந்தர்ப்பங்களில் சொன்னார்.

இறுதியாக 2019ஆம் ஆண்டு நானும் நண்பர் பூபாலசிங்கம் ரீதரசிங்கும் அவரைப் பார்க்கச் சென்றோம்.

எம்மை அடையாளம் கண்டு மார்போடு அணைத்துக்கொண்டார்.

அவரது பூதவுடலை அணைக்கமுடியாமல் அந்நிய நாட்டிலிருந்து தவிக்கின்றேன்.

மல்லிகை ஜீவா எழுத்தாளர், இதழாசிரியர், சமூகப்போராளி, முதலான அடையாளங்களுடன் மறையவில்லை. வரலாறாகவே வாழ்ந்துகொண்டிருப்பார்!

(முற்றும்.)

# விமல் தலைமையில் ஆளும் தரப்பில் 10 கட்சிகள் அரசுக்கு எதிர்க்க முடிவு

கொழும்பு, ஜன. 31

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் நூறு வீத உரிமமும் துறைமுக அதிகார சபை வசமே இருக்க வேண்டும். இந்தியாவுக்கோ அல்லது வேறு எந்தத் தரப்பினருக்கோ சிறிதளவேனும் விட்டுக்கொடுக்க முடியாது.

– இவ்வாறு ஆளும் தரப்பில் அங்கம் வகிக்கும் பத்து அரசியல் கட்சிகள் கூட்டாகத் தெரிவித்துள்ளன.

துறைமுகத்தைப் பாதுகாக்கும் முழுமையான முயற்சியைத் தொடர்ந்தும் முன்னெடுப்போம் எனவும் அக்கட்சிகளின் தலைவர்கள் உறுதியளித்துள்ளனர்.

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பாகப் பாரிய நெருக் கடிகள் ஏற்பட்டுள்ள நிலையில் ஆளும் தரப்பில் அங்கம் வகிக்கும் பத்து அரசியல் கட்சிகள் நேற்று ஒன்றிணைந்து இது தொடர்பாக பேச்சுகளை முன்னெடுத் திருந்தன.

இந்தப் பேச்சுகள் அமைச்சர் விமல் வீரவன்ஸ தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில் இந்தச் சந்திப்புக்கு அமைச்சர்களான உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார, இரா ஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர மற் றும் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ விதாரண உள்ளிட்ட பத்து கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இந்தப் பேச்சு தொடர்பாக அமைச்சர் விமல் வீரவன்ஸ கருத்துத் தெரிவிக் கையில் –

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை மீட்கும் போராட்டத்தில் துறைமுக தொழிற்சங்கங்கள், சிவில் அமைப்புகள் ஒன்றிணைந்து போராடி வருகின்றன. எனவே, தற்போதைய நிலைமை தொடர்பாக ஆராய அரசியல் கட்சி உறுப்பினர்கள் ஒன்றிணைந்து கலந்து ரையாடினோம்.

எம்மைப் பொறுத்தவரை கொழும்புத் துறைமுக கிழக்கு முனையம் முற்று முழுதாகத் துறைமுக அதிகார சபையின் வசமே இருக்கவேண்டும். இதனை இந் தியாவுக்கோ அல்லது வேறு எந்த நாட்டுக்கும் உரித்தாக்கும் அல்லது அதிக பங்கை வழங்கும் வகையில் ஏதேனும் நடவடிக்கை அரசால் எடுக்கப்படுமாயின் அதை நாம் முழுமையாக எதிர்ப்போம் என்ற தீர்மனத்தை எடுத்துள்ளோம்.

அரசில் அங்கம் வகிக்கும் பத்து கட்சிகள் ஒன்றிணைந்து இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளமையால் கொழும்புத் துறைமுகம் முழுமையாக துறைமுக அதிகார சபையின் கீழ் இருக்க வேண்டும் என்ற அழுத்தத்தைப் பிரயோகிக்கவுள்ளோம்.

இதில் ஒரு சிறிய அளவு உரிமத்தைக் கூட வேறு எந்தத் தரப்பினருக்கும் கொடுக்கக் கூடாது. எதிர்காலத்திலும் நாம் இதற்காகக் குரல் கொடுப்போம். அதேபோல் அரசைப் பாதுகாக்கவும், ஜனாதிபதியைப் பாதுகாக்கவும் நாம் நடவடிக்கை எடுப்பதுடன் இந்த நாட்டின் நலன்களுக்காகவும் ஒன்றிணைந்துள்ளோம். – என்றார்.

# கிராமப்புற பிரச்சினைகளை தீர்ப்பதில் அனைவருடனும் இணைந்த பயணம்!

## ஜனாதிபதி கோட்டா உறுதி

பாரம்பரியமாக விவசாயத்துக்கு பயன்படுத்தப்படும் நிலங்களை விவசாயிகளுக்கு தொடர்ச்சியாகப் பயிரிட அனுமதிக்கும் புதிய சட்ட திட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் பழைய சுற்றறிக்கைகளின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை மீளப் பெறுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரிகளுக்குப் பணிப்பு விடுத்தார்.

'கிராமத்துடன் உரையாடல்' நிகழ்ச்சியின் போது பொதுமக்களிடமிருந்து தொடர்ந்து வரும் கோரிக்கைகளைக் கவனத்திற் கொண்டு, மக்களின் நலனுக்காகப் புதிய சட்டங்களை வகுக்க நடவடிக்கை எடுக்குமாறு வனவிலங்கு, வன பாதுகாப்பு, சுற்றாடல் மற்றும் காணி உள்ளிட்ட அனைத்து திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

தற்போதுள்ள சிக்கல்கள் தீர்க்கப்பட்டு புதிய சட்டங்கள் வகுக்கப்படுகின்றன. பல ஆண்டுகளாக அரச நிறுவனங்களுடன் வழக்குகளில் சம்பந்தப்பட்டு பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்க இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.



சிக்கல்கள் தீர்க்கப்பட்டு இறுதி செய்யப்பட்ட 17 ஆயிரம் காணி உறுதிகளில் தான் கையெழுத்திட்டிருக்கிறார் என ஜனாதிபதி தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை முற்பகல் மொனராகலை மாவட்டத்தில் தனமல்வில, அலுத்வெள கிராம உத்தியோகத்தர் பிரிவில் குக்குல்கட்டுவ குளக்கரை வளாகத்தில் நடைபெற்ற எட்டாவது 'கிராமத்துடன் உரையாடல்' நிகழ்ச்சியில் பங்கேற்றபோதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

'கிராமத்துடன் உரையாடல்' திட்டம் 2020 செப்ரெம்பர் 25 அன்று பதுளை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது. மாத்தளை, இரத்தினபுரி, அனுராதபுரம், அம்பாறை, பொலன்னறுவை மற்றும் களுத்துறை மாவட்டங்களை உள்ளடக்கி கடந்த நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

இதுவரை சரியான கவனம் செலுத்தப்படாத நகரத்துக்கு வெளியே உள்ள தொலைதூர கிராமங்களைச் சேர்ந்த மக்களை சந்தித்து, அவர்களின் பிரச்சினைகளை விசாரித்து, அந்தச் சந்தர்ப்பத்திலேயே அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்து தீர்வுகளை வழங்குவதே ஜனாதிபதியின் நோக்கமாகும். தீர்ப்பதற்கு காலம் செல்லும் பிரச்சினைகள் பின்னர் நடவடிக்கை எடுக்கப்படுவதற்காக குறித்துக் கொள்ளப்படும்.

கிராம மக்களிடம் சென்று, அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து, அவர்களின் முன்மொழிவுகளில் இருந்து தீர்வு களைக் காண்பதும் இந்தத் திட்டத்தின் நோக்கம்.

'கிராமத்துடன் உரையாடல்' நிகழ்ச்சியில் பங்கேற்க தனமல்விலவுக்குச் சென்ற ஜனாதிபதி, கொட்டவெஹர மங்கட மகா வித்யாலய வளாகத்தில் கூடியிருந்த பாடசாலை மாணவர்கள் மற்றும் கிராமவாசிகளுடன் கலந்துரையாடி பிரச்சினைகளைக் கேட்டறிந்துகொண்டார்.

## நோர்வூட் பிரதேச சபை தலைவர் கைதாகினார்!

நோர்வூட் பிரதேச சபையின் தலைவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஒருவன்முறைசம்பவம்தொடர்பாகவே அவரை பொகவந்தலாவ பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பிரதேச தலைவரால் தாக்கப்பட்டார் எனக் கூறப்படும் நபர் தற்சமயம் டிக்கோயா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

## பூண்டுலோயாவிபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடாத்தப்படும் பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான அகிம்சைபோராட்டத்திற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் அணி ஆதரவுவழங்கும்என்பதுடன் குறித்த போராட்டத்தில் வட கிழக்கில் உள்ள தமிழ் இளைஞர்கள் அனைவரும் கலந்து கொள்வார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச சபையின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் வனேந்திரன் சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

உரிமைகளை இழந்து நீதி மறுக்கப்பட்ட சமூகமாக வாழும் எனது மக்களுடன் எனது உயிர் இருக்கும் வரை நான் தொடர்ந்தும் பயணம் செய்வேன் என்பதை இந்த போராட்டத்தின் ஊடாக தமிழ் மக்கள் புரிந்து கொள்வார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பகுதியில் நேற்று மதியம் இடம்பெற்ற விபத்தில் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

கொத்மலையிலிருந்து பூண்டுலோயா பகுதியை நோக்கி சென்ற மோட்டார் சைக்கிள் ஒன்றும் பூண்டுலோயா பகுதியிலிருந்து, கம்பளை பகுதிக்கு சென்ற கனரக லொறியும் நேருக்கு நேர் மோதியதில் இரண்டு இளைஞர்கள் அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் எனப் பூண்டுலோயா பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்கள் இராவணாகொடை கலப்பிட்டியவில் வசிக்கும் சந்தருவன் ரணசிங்க (வயது – 19) மற்றும் என்.ஜீ.தினேஷ் (வயது – 19) என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஐந்து மோட்டார் சைக்கிள்களில் இளைஞர்கள் குழு ஒன்று சுற்றி திரிந்ததாகவும், அந்தக் குழுவில் ஒரு சைக்கிளே இவ்வாறு விபத்துக்குள்ளாகியதாகவும் தெரிவித்த பொலிஸார், மோட்டார் சைக்கிளை செலுத்திய இளைஞனின் கவனயீனம் காரணமாகவே இவ்விபத்து நேர்ந்துள்ளதாகவும் மேலும் தெரிவித்தனர்.

இவ்விபத்து தொடர்பில் கனரக லொறியின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவரை நாவலப்பிட்டி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## கிழக்கு முனையத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரச்சினைகள் இருப்பதால் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் 51 வீதத்தை இலங்கை அரசும் வேறு முதலீட்டாளர்களுக்கு 49 வீதத்தையும் வழங்கினாலேயே அது அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும்.

எனினும், கொரோனாத் தடுப்பு சிக்காகவே அதனை வழங்குவதாக எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் கூறுவதில் உண்மையில்லை.

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆராய்வதற்காகப் புதிய ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டமை நன்மையான விடயமே.

ஆட்சிமாறியுள்ளமையால் நடந்த உண்மைகளை அறிவதற்காக அவ்வாறான குழுக்களை அமைத்து தகவல்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அந்தவகையில் இது வரவேற்கக்கூடிய விடயம் – என்றார்.

## தமிழர்களின் போரா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடாத்தப்படும் பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான அகிம்சை போராட்டத்திற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் அணி ஆதரவுவழங்கும்என்பதுடன் குறித்த போராட்டத்தில் வட கிழக்கில் உள்ள தமிழ் இளைஞர்களும் அனைவரும் கலந்து கொள்வார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச சபையின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் வனேந்திரன் சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

உரிமைகளை இழந்து நீதி மறுக்கப்பட்ட சமூகமாக வாழும் எனது மக்களுடன் எனது உயிர் இருக்கும் வரை நான் தொடர்ந்தும் பயணம் செய்வேன் என்பதை இந்த போராட்டத்தின் ஊடாக தமிழ் மக்கள் புரிந்துகொள்வார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## குருந்தூரில் தமிழர் வழிபாட்டு அடையாளங்கள் காணாமல் ஆக்கப்பட்டமை முற்றிலும் உண்மை!

### பொலிஸாருக்கு நிலைமையை விளக்கினார் ரவிகரன்



முல்லைத்தீவு – குருந்தூர் மலையிலிருந்த தமிழர்களின் வழிபாட்டு அடையாளங்கள் காணாமல் ஆக்கப்பட்ட விடயம் உண்மையானது என்ற விடயத்தை, முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் பொலிஸாருக்கு நேரடியாக உறுதிப்படுத்தியுள்ளார்.

குருந்தூர் மலையிலிருந்த தமிழர்களின் வழிபாட்டு அடையாளங்கள் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் அண்மையில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவுசெய்திருந்த நிலையில், அந்த விடயத்தை உறுதிப்படுத்த வேண்டுமென பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையிலேயே அங்கிருந்த தமிழர்களின் வழிபாட்டு அடையாளம் காணாமல் ஆக்கப்பட்ட விடயம் உண்மை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில் –

குருந்தூர் மலையில் இருந்த முச்சூலம் உட்பட தமிழர்களின் வழிபாட்டு அடையாளங்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளமையுடன், அங்கு தமிழ் மக்கள் சென்று வழிபடுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பிலே அப்பகுதி மக்களும், குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் கோவில் நிர்வாகத்தினரும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகளுக்கு தெரியப்படுத்தியிருந்தனர்.

இந்நிலையில் கடந்த 27 ஆம் திகதி புதன் கிழமை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பிர்களான சாள்ஸ் நிர்மலநாதன், சிவஞானம் சிறீதரன், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆகியோர் உள்ளிட்ட குழுவினர் குருந்தூர் மலைக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்டிருந்தனர்.

இதன் தொடர்ச்சியாக அன்றைய தினமே முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் முல்லைத்தீவு – பொலிஸ் நிலையத்துக்குச் சென்று குருந்தூர் மலையிலிருந்த தமிழர்களின் வழிபாட்டு அடையாளங்கள் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பிலும், தமிழ் மக்களின் வழிபாட்டுக்கு தடைவிதிக்கின்றமை தொடர்பிலும் அந்தப் பகுதி கிராம மக்களின் சார்பாக முறைப்பாட்டைப் பதிவு செய்திருந்தார்.

அத்தோடு காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் மக்களுடைய வழிபாட்டு அடையாளங்கள் மீண்டும் இருந்த இடத்தில் நிறுவப்படவேண்டும் எனவும், தமிழ் மக்கள் குருந்தூர்மலைக்குச் சென்று வழிபாடுகளை மேற்கொள்ள தொடர்ந்தும் அனுமதிக்கப்படவேண்டும் எனவும் ரவிகரன் அந்த முறைப்பாட்டினூடாகக் கோரியிருந்தார்.

அந்த வகையில் பொலிஸார் முறைப்பாட்டையும், முறைப்பாட்டோடு தொடர்புடைய ஆதாரங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மேலும், குருந்தூர் மலைப் பகுதிக்குள் முறைப்பாட்டாளரான ரவிகரன், மேலும் ஒருவர் மாத்திரமே செல்ல பொலிஸாரால் அனுமதிக்கப்பட்டதுடன், மலைப்பகுதியில் காணொலி மற்றும் புகைப்படம் எடுப்பதற்கும் பொலிஸார் அனுமதி மறுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மட்டு. வாவிக்கரையில் ஆணின் சடலம் மீட்பு!

மட்டக்களப்பு – கண்ணகி அம்மன் ஆலய வீதியிலுள்ள வாவியில், ஆணொருவரின் சடலம்நேற்று(ஞாயிற்றுக்கிழமை) கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச்சம்பவத்தில் 60 வயதுடைய ஆணொருவரே உயிரிழந்துள்ளார் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பொதுமக்கள் வழங்கிய தகவலுக்கமைய குறித்த இடத்திற்கு சென்ற பொலிஸார் சடலத்தை கண்டெடுத்து, மட்டு. போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்துள்ளனர்.

இந்தச்சம்பவத்தில் உயிரிழந்தவர் தொடர்பாக எந்தவிவரமும் அறியப்படாத நிலையில் மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# மேலும் 25 லட்சம் அஸ்ட்ராஜெனெகா கொவிஷீல்ட் தடுப்பூசியைக் கொள்வனவு செய்ய அரசு திட்டம்!

இந்தியாவிடமிருந்து மேலும் 25 லட்சம் அஸ்ட்ராஜெனெகா கொவிஷீல்ட் தடுப்பூசியை கொள்வனவு செய்ய இலங்கை அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இலங்கை அரச மருந்துக் கூட்டுத்தாபனத்தால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்படும் எனவும் தடுப்பூசிகள் ஒரு மாதத்தில் இலங்கையை வந்தடையும் என்றும் ஆரம்ப சுகாதார சேவைகள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் வைத்தியர் அமல் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இதனை விட மேலதிகமாக 335 லட்சம் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாகவும் அவை, நாட்டை வந்தடைந்ததும் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு வழங்கும் பணியை அரசாங்கம் ஆரம்பிக்கும் என்றும் வைத்தியர் அமல் ஹர்ஷ டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

கொவிஷீல்ட் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை ஆரம்பமான வெள்ளிக்கிழமை மட்டும் 5 ஆயிரத்து 286 பேர் தடுப்பூசி செலுத்தியிருந்த நிலையில் சனிக்கிழமை 32 ஆயிரத்து 539 பேருக்கு கொரோனாத் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நாட்டில் இதுவரை மொத்தம் 37 ஆயிரத்து 825 பேர் தடுப்பூசியை பெற்றுக் கொண்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

DCM யாழ் நகர்
வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன
A/L 2021, 2022
கலை, வர்த்தக வகுப்புகள்
A/L 2021 துரித மீட்டல் வகுப்புகள்
A/L 2022 அலகு ரீதியான மீட்டல் வகுப்புகள்
இடர்கால பாட அலகு மீட்டல் பிரத்தியேக வகுப்புகள்
(வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அருகாமை)
077 011 9434
நிர்வாகம்

# 31 ஆயிரம் கொரோனா தடுப்பூசிகள் இராணுவத்தினருக்கு ஒதுக்கி வைப்பு!

கொவிட்- 19 வைரஸ் பரவலில் முன்னிலையிலிருந்து செயற்படும் இராணுவ வீரர்களுக்கு வழங்குவதற்கான ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ரசெனேகா தடுப்பூசிகள் இராணுவ வைத்தியசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இராணுவத்தினருக்காக 31, 000 தடுப்பூசிகள் ஒதுக்கப்பட்டுள்ளன என இராணுவ ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பலாலி, அநுராதபுரம், மன்னார், வவுனியா, மின்னேரியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, கொழும்பு, தியத்தலாவை ஆகிய இராணுவ வைத்தியசாலைகளுக்கும், அம்பாறையிலுள்ள இராணுவகம் பெட் பயிற்சிவிப்புக் கல்லூரி, பனாகொடை முதலாவது இலங்கை இராணுவ வைத்தியப் படையணி, 11ஆவது படைப் பிரிவின்சிகிச்சைநிலையம், 22ஆவதுபடைப்பிரிவின் சிகிச்சை நிலையம், 61ஆவது படைப்பிரிவின் சிகிச்சை நிலையம் ஆகியவற்றுக்கும் தலா 500 வீதம் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன. பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு விஜயம் செய்த இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளவிருந்த படையினருடன் கலந்துரையாடினார்.

இராணுவத்தினருக்காக ஒதுக்கப்பட்ட 31,000 தடுப்பூசிகளை ஜனவரி 30ஆம் திகதியிலிருந்து 3 நாள்களுக்குள் வழங்கி நிறைவு செய்ய இராணுவ வைத்தியக் குழு எதிர்பார்த்துள்ளது. நாராஹேன்பிடவில் உள்ள கொழும்பு இராணுவ மருத்துவமனை, பனாகொடையிலுள்ள இராணுவ மருத்துவமனைகளின் இராணுவ மருத்துவ குழுவினரால் கொவிட் - 19 தடுப்பு போராட்டத்திலுள்ள 1,000 வீரர்களுக்கு கடந்த வெள்ளியன்று தடுப்பூசிகள் வழங்கப்பட்டன.

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் உடன் திருத்தம் செய்யமுடியாது!

## ஐ.நா.வுக்கு அரசு அதிரடி



யு.என்.எச்.சி.ஆர். அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட அம்சங்கள் மறுபரிசீலனை செய்யப்படும் என்றாலும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் உடனடியாக எந்த திருத்தத்தையும் செய்ய முடியாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியமும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையும் இந்தக் கோரிக்கையை விடுத்த நிலையில், வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜெயநாத் கொலம்பகே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவது தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது ஆகவே, உடனடியாக அதில் மாற்றங்களை மேற்கொள்ள இடமளிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கடுமையான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகவும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளும் பரிசீலிக்கப்படும் எனவும் ஜெயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

CNR world wide Express
International Courier & Cargo Service.
Courier & Cargo
உள்நாடு, வெளிநாடுகளுக்கான அதிவேக, மிதவேக தபால், பொதிகள் பரிமாற்று சேவை.
அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்.
கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்கு பரிமாற்ற சேவை.
வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி.
அனுப்பும் பொதிகளை இணையத் தளத்தில் கண்காணிக்கும் வசதி.
இல. 401, மணிக்கூட்டு கோபுரவீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
Tel - 021 567 4145
Mob - 077 2931062

# கணவர் முன் மனைவி தீ மூட்டி தற்கொலை!

## யாழ்.நாவற்குழியில் துயரம்

குடும்ப தகராறை அடுத்து கணவன் முன்னே மனைவி தீ மூட்டி தற்கொலை செய்துகொண்ட சம்பவமொன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் - நாவற்குழி புதிய வீட்டுத் திட்டப் பகுதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தாயாரான நீ.நிரோஜினி (வயது 30) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கணவனுடன் ஏற்பட்ட முரண்பாட்டைத் தொடர்ந்து கணவன் கண்முன்னே தனக்கு தானே தீ மூட்டியுள்ளார். அதனைக் கண்டு பதறிய கணவன் தீயை அணைத்து மனைவியை யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்த்தார்.

எனினும் அவர், சிகிச்சைப் பலனின்றி கடந்த சனிக்கிழமை உயிரிழந்துள்ளார் என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
|---|---|
| பிறந்த திகதி - 1986.04.15 | பிறந்த திகதி - 1975.05.19 |
| மதம் - இந்து V | மதம் - இந்து V |
| நட்சத்திரம் - திருவாதிரை | நட்சத்திரம் - திருவாதிரை |
| செவ் - --- | செவ் - --- |
| பாவம் - 64 | பாவம் - 38 |
| கல்வி - IT Engineering | கல்வி - Bsc பட்டதாரி |
| தொழில் - IT Engineer | தொழில் - ஆசிரியை |
| எதிர்பார்ப்பு - படித்த அழகான பட்டதாரி மணமகள் | எதிர்பார்ப்பு - அரச உத்தியோகம் |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.
குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை
077 3434 415
077 8578 528

Anna EXPRESS Courier Services
அண்ணா விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
லண்டன் ⇨ 1000/=
077 8889388
075 3305500
070 3305500
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)
எம்முடன் இணைந்து உங்களிடத்தில் பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்
யாழ்ப்பாணம் சங்கானை கல்வியங்காடு ஆவரங்கால் நெல்லியடி
சங்கத்தானை பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு
கனகராயன்குளம் மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.02.2021 இல் வெளியிடப்பெற்றது.